பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 25 செவ்வாய்க்கிழமை 09.05.2023 கதிர் 180

# கால வரையறைக்குள் பேச்சு நடத்தத் தயார்

## தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு ரணிலுடன் இன்று சந்திப்பு

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஆக்கபூர்வமாக ஆட்சியாளர்களுடன் பேசி முடிவெடுக்கநாம்தயார்என்று அறிவித்துள்ளது தமிழ் அரசுக் கட்சி. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்வுடன் அவரது அழைப்பின் பேரில் இன்று பேச்சுநடத்தும்முடிவைஎடுத்த தமிழ் அரசுக் கட்சி இரு நிபந்தனைகளின் கீழ் பேச்சில் பங்கெடுப்பதாகஅறிவித்துள்ளது.

ஜனாதிபதியுடனான இன்றைய பேச்சுத் தொடர்பில் நேற்றுமாலைகட்சித்தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் கூடி ஆராய்ந்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் விடப்பட்டநேற்றிரவுஅறிக்கை வெளியிடப்பட்டது. மிகச் சுருக்கமான அந்த அறிக்கையில் இன்றைய பேச்சில் கட்சி பங்கேற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

அடுத்த வருடம் தேர்தல்கள் ஆண்டாக மாறும் என்பதால் அரசியல் தரப்புக்கள் தங்கள் நிலைகளைப் பலப்படுத்துவதிலும் அடுத்தவருக்கு பேரும் புகழும் வந்துவிடாமல் பார்த்துக்கொள்வதிலும் கவனமாக இருக்கின்றன. அதற்குரிய கைங்கரியங்களிலும் ஈடுபடத் தொடங்கியுள்ளன. அதன் முதலாவது காட்சிகளை ஆளுநர்கள் நியமனத்தில் காண முடிகின்றது.

தற்போதிருக்கும் ஆளுநர்கள் அனைவரும் முன்னாள் அரசுத்தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டவர்கள். கோட்டா அந்தப் பதவியில் இருந்து விரட்டப்பட்டு, ரணில் அதிகாரத்திற்கு வந்த பின்னரும் அவர்களே பதவியில் தொடர்கின்றனர். தற்போது அவர்களில் சிலரைத் தூக்கிவிட்டு ☞2

## 25ஆவது அமர்வு

இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கூட்டு ஆணைக்குழுவின் 25ஆவது அமர்வு இன்று நடைபெறவுள்ளது.

வெளிவிவகாரஅமைச்சில்நடைபெறவுள்ள இந்த அமர்விற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் ஐரோப்பிய வெளிவிவகார நடவடிக்கையின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பௌலா பம்பாலோனி ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

இந்தஅமர்வில்மிகமுக்கியமாகஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் ஜி.எஸ்.பி.பிளஸ் வர்த்தகச்சலுகை உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளன.

இதில்இலங்கைசார்பில்நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள், நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், வர்த்தகம், மற்றும் உணவுப்பாதுகாப்பு, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, கல்வி, சுற்றுச்சூழல், பாதுகாப்பு, மீன்பிடி, பொதுப் பாதுகாப்பு, நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

## பொது நிதிக் குழுச் சர்ச்சை இன்னும் முடிந்தபாடில்லை

பொதுநிதிக்குழுவுக்கான தலைமைப் பதவியை ஆட்சியாளர்களின் குறை களை மூடிமறைக்க உதவும் எதிர்க் கட்சி உறுப்பி னருக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக ஐக்கிய மக் கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.


பொதுநிதிக்குழுவுக்கான தலைவரை நியமிப்பதற்கான கூட்டம் திங்கட்கிழமை இரண்டு மணியளவில் இடம்பெறவிருந்த நிலையில் பின்னர் அக்கூட்டம் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக வருகை தந்திருந்த லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து திங்கட்கிழமை அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- நாடாளுமன்ற நிலையியற் ☞2

## வடக்கு - கிழக்கு இணைந்தே பேச்சில் பங்கேற்கவேண்டும்

### தென்கயிலை ஆதினம் வலியுறுத்து



தமிழ் தேசிய கட்சிகள் முன் நிபந்தனையுடன் வடகிழக்கு இணைந்த கூட்டமைப்பாகவே பேச்சுக்களில் பங்கேற்க வேண்டும் என்று தென்கயிலை ஆதீனமும் ஒருங்கிணைந்த தமிழர் கூட்டமைப்பு என்கிற அமைப்பின் அழைப்பாளருமான அகத்தியர் அடிகளார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ☞2

## சில மாகாண சபைகளுக்கு புது ஆளுநர்கள் விரைவில்

### ஐ.தே.க. உறுப்பினர் நவீன் தெரிவித்தார்

சிலமாகாணங்களுக்குப் புதிய ஆளுநர்கள் நியமனம் விரைவில் இடம்பெறுமென எதிர்பார்கின்றேன் எனத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த உறுப்பினர் நவீன் திஸா நாயக்க, ஆளுநராக நியமிக்கப்படுபவர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்ற சம்பிரதாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஐக்கியதேசியகட்சிதலைமையகமான சிறிகொத்தவில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

அரசமைப்பின்154ஆவது உறுப்புரையின்கீழ்மாகாண ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. அதன் பிரகாரம் புதிய ஆளுநர்களை சில மாகாணங்களுக்காக நியமிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார். அதனால் விரைவில் ஆளுநர்களில் மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மேலும் ஆளுநர் ☞2

## மகிந்தவை பிரதமராக்கும் திட்டம் எதுவும் இல்லை

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்கும் எந்த திட்டமும் ஆட்சியாளர்களிடத்திலோ பொதுஜனபெரமுன இடத்திலோ இல்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிக்கப் போவதாக தெரிவிக்கப்படும் செய்தியில்எந்தஉண்மையும் இல்லை. அவ்வாறான எந்த திட்டமும் எம்மிடம் இல்லை பொது ஜன பெரமுன கட்சியிடமும் இல்லை. ☞2

## மத்திய வங்கிச் சட்டமூலத்திற்கு ஆளும் தரப்பிடமிருந்தும் எதிர்ப்பு

### முற்றாக நீக்கும்படி எதிரணி போர்க்கொடி

இலங்கைமத்தியவங்கிச் சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டுமென ஆளும் தரப்பு வலியுறுத்தியுள்ள அதேநேரம், எதிரணி அந்தச் சட்டமூலத்தை முற்றாக அகற்றுமாறு போர்க்கொடி தூக்கியுள்ளது.

நாடாளுமன்ற அமர்வு இன்று தொடங்கவுள்ள நிலையில் மே 11 மு.ப.9.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம் பெறவுள்ளது.

பெரமுன

பத்தரமுல்ல வில் உள்ள சிறிலங்கா பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியசம், "நாடாளுமனன்றில் எமது கட்சி பெரும்பான்மை அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. அந்த வகையில் இலங்கை மத்திய வங்கிச் சட்டமூலம் தொடர்பில் எமது கட்சி திருத்தங்களை ☞2

## மே 10 சூறாவளி வீசுவதற்கு வாய்ப்பு

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடல் பகுதியைச் சுற்றியுள்ள வளிமண்டலத்தின் கொந்தளிப்பான தன்மை குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வுநிலையம் எச்சரித்துள்ளது.

இந்த அமைப்பு படிப்படியாக மே 9 காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும், பின் னர் மே 10 சூறாவளியாகவும் உருவாகும் வாய்ப்பு உள்ளது என்றும் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

01 மற்றும் 12 வடக்கு அட்சரேகைகள்85மற்றும்95 கிழக்கு தீர்க்கரேகைகளுக்கு இடைப்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகம் மணிக்கு 50- 60 கிலோ மீற்றர் ஆகவும், சில சமயங்களில் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ☞2

## மேலும் அமைச்சுப் பதவிகளுக்கு ஜனாதிபதியிடம் சாதக பதிலில்லை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பொது ஜன பெரமுனவால் முன்வைக் கப்பட்ட அமைச்சு பதவிகள் தொடர்பான கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள சிறி லங்கா பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் பொது ஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப்பதவிகளை வழங்குமாறு நாம் தீர்மானம் எடுத்து ஜனாதிபதியிடம் எழுத்து மூலமாகக் கோரிக்கைவிடுத்தோம்.

அது தொடர்பில் முன் வைக்கப்பட்ட ☞2

## மே - 19 பெருமெடுப்பில் தேசிய படையினர் தினம்

### ரணில் தலைமையில் முன்னெடுப்பு



இலங்கையில் முப்பது வருடகாலப் போரின்போது வீரமரணம் அடைந்த படையினருக்கு தேசத்தின் நன்றி தெரிவிக்கும் தேசியபடைவீரர் நினைவுதின நிகழ்வுகளை முப்படைத்தளபதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் திங்கட்கிழமை காலை ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் இடம்பெற்றது.

மே 19 பத்தரமுல்லை படைவீரர் நினைவுத்தூபிக்கு முன்பாக தேசிய படைவீரர் நிகழ்வு நடைபெறவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்கள், சபாநாயகர், இராஜாங்க அமைச்சர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உட்பட முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உட்பட பாதுகாப்பு பிரதானிகள், போரில் காயமடைந்த படைவீரர்களின் பங்களிப்புடன் நடைபெறும் இந்தப் படைவீரர் நினைவுதின நிகழ்வில் பங்குபற்றுவதற்காக போரில் காயமடைந்த படைவீரர்கள், வீரமரணம் அடைந்த படை ☞2

## இந்த அடக்குமுறை ஆட்சியில் ஒருபோதும் இணைவதில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி ஏகமனதாகத் தீர்மானம்

தற்போதைய அடக்குமுறை ஆட்சியில் இணைந்து எந்தப் பதவியையும் பெறுவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம் எடுத்துள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பில் வேட்பாளரை முன்நிறுத்த வேண்டும் என்ற விசேட பிரேரணைக்கு கட்சியின் செயற்குழு கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் திங்கட்கிழமை கொழும்பில் கூடிய ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கு எதிரான செயற்றிட்டம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்றிட்டம் ஆகியன தொடர்பில் இதன்போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதாக கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

மேலும் இரண்டு சிறப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவற்றில் முதலாவதாக, ஜனநாயகத்தை மீறும் அடக்குமுறை ☞2

## சீனி, கோதுமை மா விலைகள் அதிகரிப்பு

சீனி மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப்பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் இதனைனத் தெரிவித்தார்.

அத்துடன், ஒரு கிலோ கிராம் சீனியின் விலை 25 ரூபாவால் அதிகரிக்கப் பட்டுள்ளது. இதற்கு முன்னர் ஒரு கிலோ கிராம் சீனி 225 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டதுடன், விலை அதிகரிப்பிற்கு அமைய ஒருகிலோ கிராம் சீனி 250 ரூபாவாக உயர்ந்துள்ளது..

இந்தியாவிலிருந்து சீனி இறக்குமதி செய்யப்படுவதை கட்டுப்படுத்தும் நோக்கில் விலைஅதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒருகிலோ கிராம் கோதுமை மாவின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒரு கிலோ கிராம் கோதுமை மாவிற்கான மொத்தவிற்பனைவிலை210 ரூபாவாக அதிகரித்துள்ளது.

கோதுமை மாவிற்கு விதிக்கப்பட்டிருந்த 3 ரூபா வரிச்சலுகை நீக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும் - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) புதியவர்களை நியமிப்பதற்கானநகர்வுகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்காக நான்கு ஆளுநர்களை அவர்களது பதவிகளில் இருந்து விலகுமாறு அரசுத்தலைவர் செயலகத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இதையடுத்து கிழக்கு மாகாண ஆளுநர் பதவியிலிருந்து விலகிச் செல்லும் மனநிலைக்கு வந்துவிட்டார். தனக்கு அப்படி ஒன்றும் அறிவுறுத்தல் வரவில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா தெரிவித்துள்ளார். இத்தகைய பின்னணியில் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் சரத் என்.சில்வாவை சந்தித்துள்ளார் பதவி விலக அறிவுறுத்தப்பட்ட ஆளுநர்களில் ஒருவர்.

அரசுத் தலைவரின் அறிவுறுத்தல்படிதான் பதவி விலகாவிட்டால் தன்னை அரசுத்தலைவரால் பதவிநீக்கம் செய்யமுடியுமா என்று அந்த ஆளுநர் சட்ட ஆலோசனை கேட்டிருக்கிறார். அப்படி ஆளுநர் ஒருவரைப் பதவியில் இருந்து நீக்குவதானால் மகாண சபையில் அதற்கு ஆதரவாக மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும் என்று நீதியரசர் தெரிவித்திருக்கிறார்.

மாகாண சபைத் தீர்மானம் இல்லாமல் அரசுத் தலைவராக ஆளுநர் ஒருவரைப்பதவியில்இருந்துநீக்க முடியாது என்று முன்னாள் நீதியரசரும் ஆலோசனை வழங்கியுள்ளார். இதையடுத்த அந்தஆளுநர்தனதுபதவியை விட்டுக்கொடுப்பதில்லை என்கிறமுடிவுக்குவந்துள்ளார்.

அந்த ஆளுநர் தெரண ஊடகங்களின் தலைவரும் அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்திருப்பருமான வர்த்தகர் ஒருவரையும் இந்த ஆளுநர் சென்று சந்தித்துப் பேசி இருக்கிறார். அத்தோடு மகிந்த ராஜ பக்ஷவையும் அவர் சந்தித்து இதுபற்றி ஆலோசனை கலந்துள்ளார் என்று அறியக் கிடைத்தது.

ஆக மொத்தத்தில் இனி வரும்நாட்கள்எல்லாம்ரணில் விக்கிரமசிங்க நினைத்தது போலமட்டுமேநகரும்என்று சொல்வதற்கில்லை. அவரது அரசியல் நகர்வுகளுக்கு முட்டுக்கட்டை போட்டு அவரைக் கட்டுப்படுத்தும் நகர்வுகள் எதிர்த்தரப்பால் தொடங்கி விட்டன என்பதையே இது காட்டுக்கின்றது.

- இடிமின்னல் -

## கால வரையறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வடக்கும்கிழக்கும்தமிழ் மக்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் சரித்திரபூர்வமான வாழ்விடங்கள் என்ற அடிப்படை சர்வதேசரீதியாகவும் நாட்டுக்குள்ளேயும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலும்ஏற்றுக்கொள்ளப்பட்டுஒரே அலகாக உருவாக்கப்பட்டது. அந்த அடிப்படைக்கு மாறாக எந்தப் பேச்சிலும் ஈடுபட நாம் தயாராக இல்லை.

மேற்சொன்ன அடிப்படையில்தான் மே 9 (இன்று) ஜனாதிபதியோடு நடைபெறும் கூட்டத்தில் நாம் பங்குபற்றுவோம் - என்று அந்தச் சிறிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு வருமாறு தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தின் கீழ் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்ற பெயரில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கட்சிகளான ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், விநோநோகராதலிங்கம், கருணாகரம் ஆகியோர் பங்கேற்கவில்லை.

இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்த தரப்புக்கள் ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணி என்கிற தமது புதிய கூட்டின் மூலம் மே 11,12,13 மூன்றுநாட்களும்ஜனாதிபதி அழைப்புவிடுத்துள்ளகூட்டத்திற்குகிழக்குமாகாணநாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்தால் மட்டுமே பங்கேற்போம்என்று ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

## பொது நிதிக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கட்டளைக்கு அமைவாக நிதிக்குழுவின் தலைமைப் பதவிஎதிர்க்கட்சிக்கேவழங்கப்படவேண்டும். ஆனால் ஆட்சியாளர்களின் குறைகளை மூடி மறைக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருக்கே அப்பதவியைவழங்குவதற்கு முயற்சிக்கின்றது.

இதுவரையில் பொது நிதி குழுவின் ஐந்து கூட்;டங்கள் பிற்போடப்பட்டுள்ளன. இன்றையதினம் (நேற்று) 2 மணிக்கு கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் நிரந்தரமான தலைவர் ஒருவரை நியமிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இறுதி நேரத்தில் அக்கூட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடானது நாடாளுமன் றம் தொடர்பில் ஆட்சியாளர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றத - என்றார்.

அப்போதுஇந்தஆட்சியின் குறைகளை மறைக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளார்களா? என்றுகேள்வி எழுப்பபட்டபோது லக்ஷ்மன் கிரியெல்ல, "இருக்கின்றார்கள் இருக்கின்றார்கள் தேவையான அளவில் உள்ளார்கள். இல்லையென்று கூறிவிட முடியாது" என்று குறிப்பிட்டார்.

## வடக்கு - கிழக்கு ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று வட கிழக்கு தமிழர் தாயகம் முழுவதும் தொல்லியல் திணைக்கள அடாவடிகளும் கோவில்கள் அழிப்பும்,அத்துமீறியபௌத்த விகாரைகள் அமைப்பும், பௌத்தமயக்கலும் அசுர வேகத்தில்அரசஇயந்திரத்தால் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நிலையில்அரசின்பேச்சுக்னீான அழைப்பை நாம் மிகக் கவனமாகக் கையாள வேண்டும்.

ஒவ்வொரு முறையும் பேச்சுக்கு அழைத்து பசப்பு வார்த்தைகளை கூறுகின்றார்களே அன்றி உருப்படியான நடைமுறை ரீதியிலான நீண்டகால தீர்வுகள் எதனையும் வழங்குவதாக இல்லை. உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதாகவும் இல்லை. மாறாக படிப்படியாக எமது தனித்துவம், நிலங்கள் என்பன திட்டமிட்டு பொதுமைப்படுத்தப்பட்டு வரு வதுடன் இவ்வாறான பேச்சுக்கள் மூலம் அன்று வரையான மாற்றங்கள் அங்கீகரிக்கப்பட்டனவாக மாறுகின்றன. புதிய பிரச்சினைகளை தோற்றுவிப்பதன் மூலம் அவை மறக்கடிப்படுகின்றன அல்லது மழுங்கடிக்கப்படுகின்றன.

இந்தஜனாதிபதிபதவியை ஏற்று ஒரு வருடம் ஆகின்ற நிலையில் 75வது சுதந்திர தினத்திற்கு முன்னதாக தீர்வுபொதிவெளியிடுகின்றேன்,சில ஆக்கபூர்வமானவிடயங்களை நடைமுறைப்படுத்துகின்றேன் என்றார். நடந்ததோ வேறு. தமிழர் தாயகத்தில் மேலாதிக்க ஆக்கிரமிப்பு மனநிலையுடன் மிக மோசமாக பௌத்தமயமாக்கல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு தொல்லியல் திணைக்கள அடாவடி செயற்பாடுகள் மற்றும் பௌத்தமயமாக்கல் முற்றாக நிறுத்தப்படல், ஆதி தமிழர் வழிபாட்டிடங்களுக்கு எந்த வித இடையூறுமின்றி வழி படும் உரிமையை வேற்று மத பிரசன்னங்கள் இன்றி அங்கீகரித்தல், வடகிழக்கில் காணி விடு விப்பு மற்றும் முழுமையான மீள்குடியேற்றம், தமிழ் அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலை போன்ற சமகால விடயங்களில் உடனடி தீர்வை முன்நிபந்தனையாக இம் மாதத்துக்குள் நிறைவேற்றக் கோரவேண்டும்

நிரந்தரதீர்விற்கானபேச்சு கால அட்டவணையின் கீழ் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நடுநிலை அவதானத்துடன் மேற்கொள்ளப்படவேண்டும். கடந்த காலத்தில் இந்த விடயங்களில் தலையிட்ட நாடுகளை, வாக்குறுதி தந்த நாடுகளை, ஐ.நா சபையினை எமது தீர்வு மற்றும் புதிய ஆக்கிரமிப்புக்கள் திட்டமிட்ட குடியேற்றங்களை தடுக்க, அரசு மீது பொருளாதார நெருக்கடியான இத்தருணம் மேலும் அழுத்தம் தர கோர வேண்டும்.

முக்கிய தீர்க்கமான காலகட்டத்தில் வலிகள் சுமந்த தியாகங்களினால் சிவந்த தமிழர் வாழ்வில் கண்ணீரின் உச்சந் தொட்ட இந்த மாதத்தில் அனைவரும் ஒன்றுபட்டு இந்த முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் இல்லாவிடின் ஒத்துழையாமை இயக்கத்தை அரசின் சகலதிட்டங்களுக்கும் எதிராக முன்னெடுக்க வேண்டும் எனவும்தமிழ்தேசியகட்சிகள் அனைத்தையும் கோரி நிற்கின்றோம் - என்றுள்ளது (O3)

## சில மாகாண ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பதவிக்கு எனது பெயரும் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாக முகப்புத்தகத்தில் நான் கண்டேன். ஜனாதிபதி அவருக்கு விருப்பமான, திறமையான, நம்பிக்கையான சிரேஷ்ட உறுப்பினர்களைநியமிப்பார் என்று நம்புகிறோம். யார் நியமிக்கப்படுவார்கள் என்பது தொடர்பில் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

அதேநேரம் ஆளுநர்களாக நியமிக்கப்படுபவர்கள், தாம் தேர்தல் அரசியல் புரியும் மாகாணத்தில் பதவியில் அமர்த்தப்பட மாட்டார்கள். ஏனென்றால்அவர்கள்ஆளுநர் பதவியில் இருந்துகொண்டு அரசியல் செய்யக்கூடாது என்றசம்பிரதாயம்இருக்கிறது. அதனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தச் சம்பிரதாயத்தை பின்பற்றி செயற்படுவார் என்ற நம்பிக்கை எனக்குள்ளது - என்றார்.

## மகிந்தவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மஹிந்த ராஜபக்ஷவுடன் நெருக்கமாகஇருப்பவர்களும் ஆதரவாளர்கள் சிலருமே இதனைத் தெரிவித்து வருகின்றனர். அதேநேரம் பொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பஸில் ராஜபக்ஷ என்றும் கூறியுள்ளனர்.

பஸில்ராஜபக்ஷ திறமையானவர் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். பொது ஜனபெரமுனகட்சியைஅமைத்து,சிலவருடங்களில்நாட்டை ஆட்சி செய்யும் நிலைக்கு முன்னேற்றியுள்ளார்.ஆனால் பஸஜல்ராஜபக்வை அவர்கள் எந்த அடிப்படையில் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவார்கள் என்பது பற்றி எமக்குத் தெரியாது.

ஏனெனில் பஸில் ராஜபக்ஷ இரட்டைக் குடியுரிமை உடையவர். அவர் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படுவதாக இருந்தால் அமெரிக்கக் குடியுரிமையை அவர் கைவிடவேண்டும்.

அதனை அவர் ஒருபோதும் செய்யப்போவதில்லை. என்றே தெரிவித்து வந்திருக்கிறார். அப்படியிருக்கையில் அவர்ஜனாதிபதிவேட்பாளராக களமிறங்குவதில் சட்டப் பிரச்சினை இருக்கிறது

மேலும் ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் காலம் இருக்கிறது. இருந்தபோதும் ஜனாதிபதி வேட்பாளர்களென பலரது பெயர்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய தேசிய கட்சி, பரந்துபட்ட கூட்டணி ஒன்றை அமைக்க இருக்கிறது. அதன் பிரகாரம் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்ரமசிங்கவே களமிறங்குவார் என்றார்.

## கால வரையறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முன் வைத்துள்ளது. அந்தத் திருத்தங்களைமுழுமையாக மேற்கொண்டால்நாம்அச்சட்டமூலத்தினைஆதரிப்பதென்று தீர்மானித்துள்ளோம்'என்றார்.

உதய கம்மன்பில

கோட்டேயில் உள்ள பிவித்துரு ஹெல உறுமயவின் தலைமையகத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம்பேசியகட்சியின்தலைவர் உதய கம்மன்பிலகருத்து வெளியிடுகையில்,'"இலங்கை மத்திய வங்கிச் சட்டமூலமானது சிறுவனின் கடிதத்தினைப் போன்றே உள்ளது. உயர்நீதிமன்றத்தினால்மிகக் கடுமையாக நிராகரிக்கப்பட்ட இத்தகைய சட்டமூலம் உலகில் வேறெங்கும் இல்லையென்றே கருதுகின்றேன்;. 39 பிரிவுகளில் உயர் நீதிமன்றம் 82 திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. முதலாவது பிரிவு முழுமையாகத் திரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆகவே ஆட்சியாளர்கள் இந்தச் சட்டமூலத்தினை முழுமையாக கைவிட்டுபுதியசட்டமூலத்தை வரைவதேபொருத்தமானதாக இருக்கும்.

ஆட்சியாளர்கள் அதைச் செய்யத் தயராக இல்லை. ஏனென்றால் குறித்த சட்ட மூலத்தினை கடந்த ஏப்ரல் மாதம் நிறைவடைவதற்குள் நிறைவேற்றியிருக்க வேண்டும். அவ்வாறுதான் சர்வதேச நாணய நிதியத்திற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே தான் இந்த ஆட்சி புதிய வரைவைச் செய்யாது அச்சட்டமூலத்தினைமீண்டும் கொண்டுவருகின்றது'' என்றார்.

சரித்த ஹேரத்

நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து செய்தியாளர்களிடம் பேசிய மக்கள் சபையின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி. சரித்தஹேரத்,"இலங்கைமத்தியவங்கிச்சட்டமூலத்தில்பெரும் பிரச்சினைகள் உள்ளன. இச்சட்டமூலத்தின்ஊடாகநிறைவேற்றுக்குழுவில் இருந்து மத்திய வங்கியை சுயாதீனப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுபொரு பெரும் பிரச்சினையாகும்'' என்றார்.

## மே 10 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கடல் மிகவும் கொந்தளிப்பாக இருப்பதுடன், பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் மற்றும் கடற்படையினர் மறுஅறிவித்தல் வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இந்த கடற்பரப்புகளில் தற்போது மீன்பிடிநடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மக்கள் உடனடியாக கரையோரம் அல்லது பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மேலும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கோரிக்கைகளுக்கு ஜனாதிபதியிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை. அதன் பின்னர் அமைச்சு பதவி தொடர்பில் ஜனாதிபதியிடம் மீண்டும் வலியுறுத்தப்போவதில்லை.

பொது ஜன பெரமுன நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வகிக்கிறது. இருப்பினும் பொதுஜன பெரமுன தலைமையிலான அமைச்சரவைமுழுமைபெறவில்லை. இருப்பினும் அமைச்சு பதவி தொடர்பில் அழுத்தமாக வலியுறுத்தவில்லை. அதற்கான அவசியமும் இல்லை.

அமைச்சு பதவிகளை காட்டிலும் கட்சியை வலுப்படுத்துவதற்கு கட்சியின் சகல உறுப்பினர்களும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குகிறார்கள். மக்களாணையுடன் நாங்கள் மீண்டும் ஆட்சியமைப்போம் - என்றார்.மேலும் அமைச்சுப் பதவிகளுக்குஜனாதிபதியிடம் சாதக பதிலில்லை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பொது ஜன பெரமுனவால் முன்வைக்கப்பட்ட அமைச்சு பதவிகள் தொடர்பான கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள சிறி லங்கா பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் பொது ஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்குஅமைச்சுப் பதவிகளைவழங்குமாறுநாம் தீர்மானம் எடுத்து ஜனாதிபதியிடம் எழுத்து மூலமாகக் கோரிக்கை விடுத்தோம்.

அது தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்குஜனாதிபதியிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை. அதன் பின்னர் அமைச்சு பதவி தொடர்பில் ஜனாதிபதியிடம் மீண்டும் வலியுறுத்தப்போவதில்லை.

பொது ஜன பெரமுன நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வகிக்கிறது. இருப்பினும் பொதுஜன பெரமுன தலைமையிலான அமைச்சரவைமுழுமைபெறவில்லை. இருப்பினும் அமைச்சு பதவி தொடர்பில் அழுத்தமாக வலியுறுத்தவில்லை. அதற்கான அவசியமும் இல்லை.

அமைச்சு பதவிகளை காட்டிலும் கட்சியை வலுப்படுத்துவதற்கு கட்சியின் சகல உறுப்பினர்களும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குகிறார்கள். மக்களாணையுடன்நாங்கள்மீண்டும் ஆட்சியமைப்போம்-என்றார்.

## மே - 19 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வீரர்களின் உறவினர்கள் மற்றும்பாடசாலை மாணவர்கள்ஆகியோருக்கும்அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

இந்தஆண்டும்பெருமைக்குரிய வகையில் படைவீரர் நினைவுநிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதுடன், நாட்டின் ஆள்புலஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாப்பதற்கு உயிர்த்தியாகம் செய்த இராணுவம், விமானப் படை, கடற்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப்படை வீரர்களின் நித்திய நினைவுகளையும், வீரத்தையும் போற்றும் வகையில் விசேட படைமேளதாளமும், மலர் அஞ்சலியும் இடம்பெறவுள்ளதாகபாதுகாப்பு செயலாளர் ஜெனரல்(ஓய்வு பெற்ற) கமல்குணரத்ன தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன்,முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் உட்பட பாதுகாப்பு பிரிவு பிரதானிகள் கலந்து கொண்டனர்.

## இந்த அடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சியில்இணையக்கூடாது, பதவிகளைப் பெறக்கூடாது என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்டபோதுசெயற்குழுஏகமனதாகஅதனைஅங்கீகரித்தது.

அடக்குமுறை ஆட்சியுடன் தொழிற்சங்கம் பற்றிக் கலந்துரையாடுதல் அல்லது அத்தகையபிரேரணைகளைக் கொண்டு வருதல் மக்களின் பெயரால்செய்யப்படும்பெரும் தவறாகும். ஆகவே அவ்விதமான தவறு செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது என்ற தீர்மானம்முன்வைக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

எவ்வாறாயினும், நாட்டுக்கு ஆதரவான முற்போக்கு செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதில் கட்சி என்ற ரீதியில் கலந்துரையாடி தீர்மானங்களைமேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரை முன் நிறுத்தவேண்டும் என்ற மற்றுமொரு பிரேரணைக்கும் செயற்குழு ஏகமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

அத்துடன் குறித்த வேட்பாளரின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் ஒரு பரந்த கூட்டணியைக் கட்டியெழுப்பவும், அந்தக் கூட்டணியைக் கட்டியெழுப்புவதற்கு முழு அதிகாரத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் கட்சித் தலைவராக வழங்கவும் செயற்குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

கட்சியின்செயற்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்படும் எவருக்கும், கட்சியின் யாப்பின்படி தேவையான ஒழுக்காற்று நடவடிக்கையைஎடுப்பதற்கும் சஜித் பிரேமதாசவுக்கு அதிகாரத்தை வழங்க செயற்குழு அனுமதி அளித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு – தொலைபேசி இலக்கம் 076 443 8622










இந்தியா-சீனா-தாய்லாந்-டுபாய்
போன்ற நாடுகளில் இருந்து வியாபார நோக்கத்திற்காக பொருட்களை இலங்கைக்கு விரைவாகவும் குறைந்த கட்டணத்திலும் இறக்குமதி செய்து தரப்படும்
உங்கள் பொருட்கள் விபரங்களையும் நிறையையும் வட்ஸ்சப்(whatsup) செய்வதன் ஊடாக கட்டண விபரங்களை அறிய முடியும்
0753305500

காலைக்கதிர்
Kalaikkathir

# போதை மற்றும் சமூகச் சீர்கேடுகளிலிருந்து இளைஞர் யுவதிகளை பாதுகாக்க திட்டம்!

## வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் ஆரம்பிப்பு



யாழ்ப்பாணம் வலி. வடக்குதெல்லிப்பழைபிரதேச செயலாளர் பிரிவில் போதை மற்றும்சமூகசீர்கேட்டிலிருந்து இளைஞர், யுவதிகளைப்பாது காக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத் தின் நிதிப்பங்களிப்புடன், சர்வோதயம் அமைப்பின் அனுசரணையுடன் பிரதேச செயலகத்துடன் இணைத்து இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்து ரையாடல் திங்கட்கிழமை காலை 10 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

உதவிபிரதேசசெயலாளர் சங்கீதா கோகுலதர்சன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பிரித்தா னிய சைவத் திருக்கோவில் கள் ஒன்றியத்தின் தலைவ ரும், லண்டன் வோள்தம்ஸ் ரோம்கற்பகவினாயகர்ஆலய அறங்காவலர் கோபால கிருஷ்ணன், கிராம சேவை யாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அரச உத்தியோகத்தர் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, போதைமற் றும் சமூக சீர்கேட்டிலிருந்து இளைஞர், யுவதிகளை பாது காக்க பிரதேச மட்ட குழு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொள்ளுப்பிட்டியில் நிலமொன்றை கொள்வனவுசெய்யும்போது மோசடி!

கொள்ளுப்பிட்டியில் உள்ள நிலமொன்றை கொள்வனவுசெய்யும் நடவடிக்கையின் போது இடம் பெற்ற மோசடி தொடர்பாக சிஐடியினர் நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனைத் தளமாக கொண்டநிறுவனமொன்றின் பங்குதாரர்களுக்காக நில மொன்றைகொள்வனவுசெய் யும்நடவடிக்கையின்போதே இந்த மோசடி இடம்பெற் றுள்ளது.

2004 இல் கொள்ளுப் பிட்டி காலி வீதியில் 219 பேர்ச் நிலத்தை கொள்வ னவுசெய்வதற்கான நடவடிக் கைகளின் போது முறை கேடு இடம்பெற்றதாகத் தெரி விக்கப்பட்ட முறைப்பாட்டை கொழும்பு வர்த்தக குற்ற பிரிவினர் விசாரணை செய்து வந்தனர்.

பிரிட்டனை சேர்ந்த நிறுவனமொன்றின் பத்து பங்குதாரர்கள் குறிப்பிட்ட நிலத்தைக் கொள்வனவு செய்வதற்கு 1.3 மில்லியன் ஸ்டேர்லிங்பவுண்ட்செலவிட் டுள்ளனர்.

2010 ஜூலையில் இந்த நிலம்விற்பனையாகியுள்ளது.

பிரிட்டிஸ் பிரஜையொருவர் (தமிழர்) மற்று மொருபிரிட்டிஸ்பிரஜைஇந்த நில கொள்வனவில் ஏமாற் றியுள்ளார் என சிஐடியின ருக்கு முறைப்பாடு செய்துள் ளார்.

இந்த நிலத்தை கொள்வ னவு செய்வதற்கான மையப் புள்ளியாக செயற்பட்டவர் ஏனைய பங்குதாரர்களை ஏமாற்றிவிட்டார் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சிஐடியினர் மேற்கொண்ட விசாரணைகளின் போது குறிப்பிட்ட நிலம் 790 மில்லி யனிற்கு விற்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

நவம்பரில் பிரதான சந்தேகநபருக்கு எதிராக நீதி மன்றம் பயணத் தடையை விதித்திருந்தது.

# சிறுவர்களின்போஷாக்கு மட்டத்தை அதிகரிக்க விசேட வேலைத் திட்டம்!

சிறுவர்களின்போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க இந்த விடயத்தைத் தெரிவித் துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் முன்பள்ளிச் சிறுவர்களுக்கு உயர் போஷாக்குடன் கூடிய பிஸ்கட்வகைகளைவழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த மாதம் முதல் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்கதெரிவித்துள்ளார்.

# கட்டானையில் வெளிநாட்டு முதலீட்டாளர்மீது தாக்கு தொழிற்சாலையைத் திறக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்!

கட்டானை பிரதேசத்தில் அமைந்துள்ள ஆடை தொழிற்சாலை ஊழியர்கள் தொழிற்சாலையைத் திறக்குமாறு வலியுறுத்தி நேற்று (திங்கட்கிழமை) முற்பகல் ஆர்ப்பாட்டத்திலும் பேரணியிலும் ஈடுபட்டனர்.

தமது தொழிலை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிடுமாறும் கோரியும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

கம்பஹா மாவட்டத்தில் கட்டானை பிரதேசத்தில் அமைந்துள்ளஆடைதொழிற் சாலையின்உரிமையாளரான ஓமான் நாட்டை சேர்ந்தவர் மீது கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது.

கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அடியாள்கள் சிலர் தாக்குதல் மேற்கொண்டனர் எனகுற்றச்சாட்டு தெரிவிக்கப் படுகிறது. இதன் காரணமாக அந்த ஆடை தொழிற்சாலை கடந்த ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி முதல் தற்காலிகமாக மூடப்பட்டு இருக்கிறது. 350 பேர் தொழில் வாய்ப்பை இழக்கும் அபாயத்தில் உள் ளனர்.

இந்நிலையிலே தொழிற் சாலை ஊழியர்கள் நேற்று (திங்கட்கிழமை) இந்த ஆர்ப் பாட்டத்தை நடத்தினர்.

# அனுமதிப்பத்திரம் புதுப்பிக்காத வாகனங்கள் கறுப்பு பட்டியலில்!

## மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழு அதிரடி

5 வருடங்களாக வருமான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காத வாகனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித் துள்ளது.

அவ்வாறான வாகனங் களை தகவல் அமைப்பிலி ருந்து நீக்குவதற்கும் தீர் மானித்துள்ளதாக மோட் டார் போக்குவரத்து ஆணை யாளர் நாயகம் நிராந்த அனு ருத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மோட்டார் போக்கு வரத்து திணைக்களத்தில் 83லட்சம்வாகனங்கள்பதிவு செய்யப்பட்டுள்ள போதும் 60 லட்சம் வாகனங்கள் மட்டுமே கியு. ஆர் குறியீட்டு முறைமை மூலம் பதிவு செய் யப்பட்டுள்ளன.

எனவே, 5 வருடங்க ளுக்கு மேலாக வருமான வரி அனுமதிப்பத்திரம் பெறாத வாகனங்கள், மாவட்ட மோட்டார் வாகன பரிசோத கரின் உதவியுடன் தகவல் அமைப்பில் இருந்து நீக்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

# அறைகளை வாடகைக்கு விடும் போர்வையில் இயங்கிய விபசார விடுதி காலியில் சுற்றிவளைப்பு!

அறைகளை வாடகைக்கு விடும் போர்வையில் நடத்தப் பட்ட விபசார விடுதியொன்று சுற்றிவளைக்கப்பட்டு அதன் முகாமையாளரும் விபசார தொழிலில் ஈடுபடவிருந்த பெண் ஒருவரும் உதவியாளர் ஒருவ ரும் கைது செய்யப்பட்டனர் என காலி பொலிஸார் தெரிவித்த னர்.

காலி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஸ் கமகேவின் அறிவுறுத்தலின் பேரில், இலஞ்ச ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதி காரி பொலிஸ் பரிசோதகர் எம். நிமல் மதநாயக்க (14353) தலை மையிலான குழுவில் பெண் உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீயா னியும் பங்கேற்று இந்தச் சுற்றி வளைப்பை மேற்கொண்டது.

சந்தேகத்தில் கைதான இவர் களை காலி நீதிவான் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# இலங்கை அதிபர் சேவை மூன்றாம் தரத்துக்கு ஆட்சேர்ப்பு தொடர்பான அறிவிப்பு வெளியானது!

இலங்கை அதிபர் சேவையின் மூன்றாம் தரத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வ தற்காக நடத்தப்பட்ட மட் டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் எதிர் வரும் 22 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை கல்வி அமைச் சில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர். இது தொடர்பான மேலதிக தகவல் களை இணையத்தளத்துக்கு சென்று பெற்றுக்கொள்ள முடியும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வரையறுக்கப்பட்ட போட்டித் தேர்வு 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெற்றது.

# குடிநீர் கட்டணம் செலுத்தாத அரச நிறுவனங்களுக்கு இணைப்பு 'கட்'!

கட்டங்களை செலுத்தாத அரச நிறுவனங்களுக்கு எதிர்காலத்தில் நீர் விநியோ கத் துண்டிப்பு பட்டியலில் சேர்க்கப்படும் என தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபை தெரிவித் துள்ளது.

மேலும், 90 நாள்க ளுக்குப் பின்னர் அரச நிறு வனங்களுக்கும் தாமதக் கட்டணம் அறிமுகப்படுத் தப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபை அறிவித் துள்ளது.

2.9 மில்லியன் மக்கள் நீரை பெற்றுக்கொள்கின்ற நிலையில் அதில் பெரும்பாலா னோர் நெருக்கடி காரண மாக மாதாந்திர கட்டணத்தில் 50 வீதத்தை செலுத்து வதை வழக்கமாகக் கொண் டுள்ளனர்.

# மட்டு. கொக்குவிலில் சிறுவர் பராமரிப்பு நிலையத்திலிருந்து 2 சிறுமிகள் ஓட்டம்!

மட்டக்களப்பு கொக்கு வில் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு சீர்திருத்த நிலை யம் ஒன்றில் இருந்து 14,13 வயதுடைய இரு சிறுமி கள் திங்கட்கிழமை தப்பி ஓடியுள்ளனர்.

மாவட்டத்தில் சிறுவர் திருமணம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுவர்கள் குறித்த பராமரிப்புநிலையங்களுக்கு நீதிமன்றத்தால் அனுப்பப்படு கின்றனர்.

இந்நிலையில் நீதிமன் றால் குறித்து சிறுவர் பராம ரிப்புக்காக அனுப்பப்பட்ட வாழைச்சேனை பிரதே சத்தைச் சேர்ந்த 14 வயது சிறுமியும்ஏறாவூரைச்சேர்ந்த 13 வயது சிறுமியும் அங்கி ருந்து தப்பி ஓடியுள்ளார்.

திங்கள் அதிகாலை 2.30 மணியளவில் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர் என பாராமரிப்பு நிலையத்தினர் முறைப்பாடு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசா ரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# செவ்வாய் முதல் முள்ளிவாய்க்கால் கஞ்சி: யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் ஏற்பாடு!

யாழ்ப்பாணம், மே 09

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து செவ்வாய்க் கிழமை முதல் எதிர்வரும் 15 ஆம்திகதிவரைவடக்குகிழக்கு தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்கால் கஞ்சியை வழங்க யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியம் ஏற்பாடு செய் துள்ளது.

இனவழிப்புக்குஉள்ளான இனத்தின் வரலாற்றையும் வலிகளையும் இளைய தலைமுறையினருக்கு கடத் தும் செயற்பாடாக இதனை முன்னெடுக்கவுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்த னர்.

1948 ஆம் ஆண்டு முதல் தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக 1958, 1976, 1983 ஆண்டுகளில் இனப்படுகொலைக்கு உள்ளான தமிழினம், ஈழப் போர் ஆரம்பிக்கப்பட்ட பின் தினம் தினம் திட்டமிட்ட பாரிய இனவழிப்புக்கு உள் ளாக்கப்பட்டனர் என்றும் சுட் டிக்காட்டியுள்ளனர்.

இந்த உயிர் காத்த கஞ் சியையே இன்று எமது உரிமை போராட்டத்தின் ஒரு வடிவமாக, மக்களின் மீதான இனவழிப்பின் சர்வதேச நீதி தேடலின் ஒரு கருவியாக பயன்படுத்தவுள்ளதாகவும் மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

இவ்வாறு தாம் முன்னெ டுக்கும் இந்தச் செயல்பாட்டில் அனைத்து தமிழ் மக்களும் வேறுபாடுகளை துறந்து தமிழினமாக தம்முடன் இணைந்துகொள்ளுமாறு அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

# பாடசாலை கழிவறையில் வைத்து 12 வயது மாணவி துஷ்பிரயோகம்!

## 55 வயதுடைய ஆசிரியர் கைது

பாடசாலையில் 12 வயது மாணவியை துஷ்பிரயோ கத்துக்கு உட்படுத்திய 55 வயதுடைய ஆசிரியர் ஒரு வர் ஹல்துமுல்ல பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள் ளார்.

குறித்த மாணவி பாட சாலையின் கழிவறையில் வைத்து துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

ஏனைய மாணவர்கள் இந்த ஆசிரியரால் துஷ்பிர யோகத்துக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்களா என்பதை அறிய ஹல்துமுல்ல பொலி ஸார்விசாரணைகளைஆரம் பித்துள்ளனர்.




# கீரி சம்பா அரிசிக்கு சந்தையில் தட்டுப்பாடு!

சந்தையில் கீரி சம்பாவிற்கு தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளதாக அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆலை உரிமையாளர் கள் அரசின் கட்டுப்பாட்டு விலையை மீறி கீரி சம்பா விற்பனை செய்வதால் விலை 25 முதல் 30 ரூபா வரை உயர்ந்துள்ளதாக வும் அச்சங்கம் தெரிவித்துள் ளது.

# அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிப்பு!

## பண்டார உத்தரவாதம்

இந்த ஆண்டின் இறுதி யில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அர சாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் பாலித ரங்கே பண்டார தெரிவித் துள்ளார்.

அரசாங்கம் எதிர்பார்த்த இலக்குகளை எட்டினால், பொதுமக்களும் பயன்பெறு வார்கள் என்றும் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள் ளார்.

நாட்டின் பொருளாதா ரத்தை ஸ்திரப்படுத்தியதன் பின்னர் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க ஜனாதிபதி தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

காலைக்கதிர் Kalaikkathir

# எதைப் பேசவேண்டும்?

தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசுத் தலைவருக்கும் இடையில் இன்று பேச்சு நடக்கின்றது. இந்தப் பேச்சில் தமது நிலைபப்பாடு என்ன என்பதை தமிழ் அரசுக் கட்சி அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஆக்கபூர்வமாக ஆட்சியாளர்களுடன் பேசி முடிவெடுக்க நாம் தயார் என்று அந்த அறிவிப்புக் கூறுகின்றது.

வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் சரித்திரபூர்வமான வாழ்விடங்கள் என்ற அடிப்படை சர்வதேச ரீதியாகவும் நாட்டுக்குள்ளேயும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரே அலகாக உருவாக்கப்பட்டது. அந்த அடிப்படைக்கு மாறாக எந்தப் பேச்சிலும் ஈடுபட நாம் தயாராக இல்லை என்றும் அது தெரிவித்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பேச்சுக்கள் முடிக்கப்படவேண்டும் என்பதையே தமிழ் அரசுக் கட்சி தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. அதேபோன்று வடக்கு, கிழக்கை தனித் தனியே கையாள்வதற்கு ரணில் விக்கிரமசிங்க எடுத்துவரும் நடவடிக்கைக்கு தமிழ் அரசியல் பரப்பில் எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையில், தமது கட்சி ரணிலின் அப்படியான நகர்வுக்கு ஆதரவாக இருக்காது என்பதையும் அந்த அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

ஆனால், என்ன பேசப்படப்போகின்றது என்பது பற்றி அந்த அறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஒருவேளை கட்சித் தலைவர்களுக்குமேகூட அது தெரியாமல் இருக்கலாம். அரசுத் தலைவர் செயலகத்தால் பேச்சு நிகழ்ச்சி நிரல் பகிர்ந்துகொள்ளப்படாமல் இருக்கலாம். இருப்பினும் இனிவரும் பேச்சுக்களில் நிரந்தர அரசியல் தீர்வை விரைந்து எடுப்பதற்கான நடவடிக்கைகளின் மீது மட்டுமே கவனத்தைக் குவிப்பது அவசியம்.

இதுவரை காலமும் தமிழர் தரப்பு உடனடித் தீர்வு, நீண்ட காலத் தீர்வு என்பவற்றின் அடிப்படையிலேயே பேச்சுக்களை அணுகி வந்தது. படையினரை வடக்கு கிழக்கில் இருந்து விலக்கிக்கொள்ளுதல், படையினர் ஆக்கிரமிப்பிலிருந்து காணிகளை விடுவித்தல், அரசியல் கைதிகளை விடுவித்தல், வடக்கு கிழக்கில் பௌத்த மயமாக்கலைத் தடுத்து நிறுத்துதல், காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கான தீர்வு ஆகிய விடங்கள் உடனடித் தீர்வுக்கான முக்கிய அம்சங்களாகப் பேச்சு மேசையில் வைக்கப்பட்டன.

இவற்றோடு சேர்த்து நிரந்தர அரசியல் தீர்வுக்கான கலந்துரையாடல்கள் நடத்தப்படுவதும் வழமை. உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்து பரபரப்பான அறிவிப்புக்கள் வெளியாவதும் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதாகச் சொல்லப்படுவதும் இந்தப் பேச்சுக்களின் பயன்களாகக் கடந்த காலங்களில் காணப்பட்டிருக்கின்றன. ஆனால் பின்னர் நடைமுறையில் பெரியளவில் எதுவும் இடம்பெறுவதில்லை. பேச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை என்கிற நிலையில்தான் உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இதுவரையில் அமைந்திருக்கின்றன. எனவே இந்த அணுகுமுறை இனி–வரும் பேச்சுக்களில் மாற்றப்படவேண்டும்.

நிரந்த அரசியல் தீர்வு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் மட்டுமே இனிவரும் காலங்களில் பேசப்படவேண்டும். நிரந்தரத் தீர்வுக்கு மட்டுமே அழுத்தம் கொடுக்கப்படவேண்டும். நிரந்தரத் தீர்வு ஒன்று வந்துவிட்டால், உடனடிப் பிரச்சினைகள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்துவிடக்கூடிய அல்லது அவற்றைத் தமிழ்த் தரப்புக்களே கையாளக்ககூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன.

தமிழர்கள் மீது கடந்த காலங்களில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை தொடர்பில் நீதி வழங்ப்படுவது தீர்வுக்கான அடிப்படை, அந்த நீதி இல்லாமல் சரியான தீர்வும் அமையப் போவதில்லை என்வே நீதி நிலைநாட்டப்படுவதுடன் தீர்வும் சாத்தியமாக்கப்படவேண்டும். நீதி நிலைநாட்டப்படாத தீர்வு நீதியைக் காணாமலாக்கிவிடும் என்பதால் அதைத் தவிர்த்து தீர்வுக்குச் செல்ல முடியாது.

இத்தகைய நிலையில் அரசுடனான பேச்சுக்கள் முற்றிலும் நிரந்தரத் தீர்வை நோக்கியதாக அமைவதே இனிவரும் காலங்களில், அதுவும் குறுகிய கால எல்லைக்குள் நடப்பதே சிறந்தது. அதற்கேற்ற அரசியல் அணுகுமுறையை தமிழ்க் கட்சிகள் கைக்கொள்ளவேண்டும்.

# சிறுவர்களைக் கடத்தும் நோக்கத்தில் மன்னாரில் வாகனங்கள் சுற்றித்திரிதல்!

## அரச அதிபர் எச்சரிக்கை

மன்னாரில் அண்மை காலங்களாக சந்தேகத்துக்கு இடமான வாகனங்கள் சுற்றி திரிவதாகவும் சிறுவர்களை இலக்கு வைத்து அவர்களைக் கடத்தும் நோக்கில் சிலர் மன்னார் மாவட்டத்திற்குள் ஊடுருவி உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், குறித்த சம்பவம் தொடர்பாக நேற்று (திங்கட்கிழமை) துரித விசாரணை முன்னெடுக்கப்பட்டதோடு பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

இந்த;விடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னாரில் உள்ள பாடசாலை மாணவர் ஒருவரை வாகனம்ஒன்றில்வந்தவர்கள் இனிப்புபண்டங்களைவழங்கி பலவந்தமாக ஏற்றிச்செல்ல முயற்சி செய்யப்பட்டதாக மாணவர் தனது பெற்றோரிடம் தெரிவித்த நிலையில் இந்தச் சம்பவம் தெரிய வந்துள்ளது.

இந்தவிடயம்தொடர்பாக குறித்த மாணவன் கல்வி கற்கும் பாடசாலைக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் நேற்று (திங்கட்கிழமை) காலைகுறித்தபாடசாலைக்குச் சென்று மாணவனிடம் விசாரணைகளை மேற்கொண்டேன்.

இதன் போது மேலும் ஒரு மாணவனை நேற்று (திங்கட்கிழமை) காலை பாடசாலைக்குச் செல்லும் போது இனிப்புபண்டங்களை வழங்கி வாகனத்தில் ஏற்ற முற்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தவிடயம்தொடர்பாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதோடு, பாடசாலை பகுதிகளில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளைமுன்னெடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளேன்.

மாணவர்கள் கவனம் தொடர்பாக பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் என்னுடன் தொடர்பை ஏற்படுத்தி துரித நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே சந்தேகத்திற்கிடமான வாகனங்களின் நடமாட்டம் தெரிந்தால் உடனடியாக பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வாருங்கள். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஓமானிலுள்ள இலங்கை பணிபெண்கள் விடுத்துள்ள உருக்கமான கோரிக்கை!

கொழும்பு, மே 09

ஓமான் நாட்டுக்கு பணிப் பெண்களாக வேலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பல்வேறு சித்திரைவதைக்குள்ளாகி இலங்கைத் தூதரகத்தில் தஞ்சடைந்து 9 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 74 பணிப் பெண்கள்தங்களைநாட்டுக்கு அனுப்புமாறு உருக்கமாகக் கோரிக்கை விடுத்து காணொளி வெளியிட்டுள்ளனர்.

நாட்டிலுள்ள முகவர்கள் ஊடாக ஓமான் நாட்டுக்குப் பணிப்பெண்களாகச் சென்ற பணிப் பெண்கள் வீட்டின் உரிமையாளர்களால் அடித்தும்,நெருப்பால்சூடுவைத்தும் மற்றும்சம்பளம்வழங்காமை போன்றபல்வேறுசித்திரவதை காரணமாக அங்கிருந்து வெளியேறி இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவ்வாறு தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளவர்கள் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன், தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டு உறவினர்களுடன்கூடத்தொடர்புகொள்ள முடியாதளவிற்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இங்குதிருமணம்கடந்த உறவின் மூலம் கருவுற்றவர்களை உடனடியாக நாட்டுக்கு அனுப்புகின்றனர். ஆனால் ஆரோக்கியமாக உள்ளவர்கள் எவரையும் நாட்டுக்கு அனுப்பாது 9 மாதம் வரை தடுத்து வைத்துள்ளதுடன் பலர் பல நோய்களால்பல்வேறுஅசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றதுடன் சிறையில் அடைக்கப்பட்டவர்கள்போல எங்களை நடத்துகின்றனர்.

இங்கு நடக்கும் அட்டூழியங்கள் எதுவும் வெளியே தெரிவிக்க முடியாத நிலையிலுள்ளதுடன் இங்கிருந்து நாட்டுக்கு செல்கின்ற பெண் ஒருவரின் கையடக்க தொலை பேசியில் நாங்கள் உரையாடிஅவரிடம்இதனை வெளியிடு மாறு தெரிவித்து கதைத்துஅனுப்பியுள்ளோம். எனவே,எங்களைஇங்கிருந்து காப்பாற்றுங்கள் எனக் கைகூப்பி கேட்கின்றோம் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இறக்குமதி செய்யப்பட்ட மருந்தில் கிருமி:

# 10 நோயாளர்கள் கண்பார்வை இழப்பு! நுவரெலியாவில் அதிர்ச்சித் தகவல்

நுவரெலியா, மே 09

கண்சத்திரசிகிச்சைசெய்யப்பட்ட10நோயாளர்களுக்கு பார்வை பாதிப்பு ஏற்பட்டுள்ள சம்பவம் நுவரெலியாவில் பதிவாகியுள்ளது.

இவர்கள், நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்துகொண்டவர்கள் எனத் தெரியவருகின்றது.

கண் சத்திரசிகிச்சை செய்துகொண்ட குறித்த 10 நோயாளர்கள்உரியபார்வை கிடைக்காமல் தொடர்ந்து வைத்தியசாலையில் தாங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் சத்திரசிகிச்சைக்குள்ளான 50 வயதுக்கும் மேற்பட்ட 10 நோயாளர்களே இவ்வாறு தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்தில்கிருமிகள்கலந்துள்ளதால் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பார்வை பலவீனமடைந்துள்ளதாக நுவரெலியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் மகேந்திர செனவி ரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், சத்திரசிகிச்சைகள் முடிந்து வீடுகளுக்குச் சென்ற நோயாளர்கள் கண் பார்வை முற்றாக இழந்த நிலையில் மீண்டும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், தேவையான சிகிச்சைகளைமேற்கொண்டு படிப்படியாக குணமடைந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# டெலிகொம் பங்கு விற்பனை விவகாரம்: குறிப்பிட்ட காலத்துக்கு செயற்பாடில்லை

## உயர் நீதிமன்றுக்கு உறுதிமொழியளித்தார் நிதியமைச்சு செயலர்

அரசாங்கத்திற்குச் சொந்தமான ஸ்ரீலங்கா டெலிகொம் பங்குகள் குறிப்பிட்ட காலத்திற்கு விற்பனை செய்யப்படமாட்டா என நிதியமைச்சின் செயலாளர் உயர் நீதிமன்றத் தில் உறுதியளித்துள்ளார்.

ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தில் பங்குகளை விற்பனை செய்வதற்கு திறைசேரி அனுமதியளிக்காது என உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா டெலிகொம் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளது மற்றும எஸ்.டில்.பி. பி. எல். சி இன் வெளியிடப்பட்ட பங்கு மூலதனத்தின் 49.50 சதவீத பங்குகளைதிறைசேரிவைத்துள்ளது.

இரண்டுநிறுவனங்களிலும் திறைசேரியிடம் உள்ள பங்குகளை விலக்கிக்கொள்வதற்கு அமைச்சரவை கொள்கை அடிப்படையில் ஒப்புதல் அளித்துள்ளதாக திறைசேரியின் செயலாளர் ஸ்ரீலங்கா டெலிகொம் மற்றும் லங்கா ஹொஸ்பிடல்ஸ் பிஎல்சியின் பணிப்பாளர் சபைக்கு தெரிவித்தார்.

லங்கா ஹொஸ்பிடல் பிஎல்சியின் பங்கு மூலதனத்தின் 51.34 சதவீத பங்குகளும் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைகாப்புறுதிக்கூட்டுத்தாபனத்திடம் உள்ளது.

இந்த நடவடிக்கை பல பிரிவுகளை ஒன்றிணைத்துள்ளது மற்றும் எஸ்.எல்.ரி. இன் தொழிலாளர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஸ்ரீலங்கா டெலிகொம் பங்குகளை விலக்குவதற்கு எதிராகபல போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

தற்போது நிலுவையில் உள்ள பங்கு விலக்கல் நடவடிக்கைகள் சட்டபூர்வமான வழிகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திறைசேரியின் செயலாளர் நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

குறித்த மனு திங்கட்கிழமைவிசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் உயர்நீதிமன்றுக்கு இந்த விடயத்தை அறியப்படுத்தியுள்ளார்.

# மன்னாரில் கத்திமுனையில் வைத்தியரிடமிருந்து பெருந்தொகை பணம் மற்றும் நகை கொள்ளை!

மன்னார்-நானாட்டான் பிரதேசத்தில் ஓய்வுபெற்ற வைத்தியர் ஒருவரின் தனியார் கிளினிக்கிற்கு ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் புகுந்த கொள்ளையர்கள் கத்தியை காட்டி மிரட்டி சுமார் 5 லட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பணம் மற்றும் நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் நானாட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த வைத்தியரின் தனியார் கிளினிக்கில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும்தெரியவருவதாவது-

ஞாயிற்றுக்கிழமைஇரவு 9 மணியின் பின் கிளினிக் வளாகத்தினுள் நுழைந்த இரண்டுபேர் சிங்களத்திலும் தமிழிலும் பேசிக் கொண்டு குறித்த வைத்தியரிடம் கத்தியைக் காட்டி மிரட்டி உள்ளனர்.

இதன் போது சுமார் 5 லட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பணம் மற்றும் நகை போன்றவற்றை அபகரித்துள்ளனர்.

மேலும் அந்த வீட்டில் இருந்த பெண்களின் நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்கள்.

இதன் போது வைத்தியரின் மூக்குக் கண்ணாடி உடைந்ததில்வைத்தியருக்கு முகத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பாக நேற்று (திங்கட்கிழமை) காலை பாதிக்கப்பட்ட வைத்தியர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை நானாட்டான் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பல திருட்டு சம்பவங்கள்நடைபெறுகின்றன எனப் பொதுமக்கள்தரப்பில்இருந்து தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வைத்தியர் நீண்டகாலம் வைத்தியராக சேவையாற்றி அண்மையில் ஓய்வுபெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555
conditions apply*


Malaysia Tour
5 DAYS 4 NIGHTS
INCLUSION
» 04 Night stay in Kuala Lumpur
» Daily breakfast at hotel
» Return AirTicket
» Getting Highland tour with cable car
» City tour on arrival day
» Evening tour to twin tower
» Batu caves temple visit
» Putrajaya city tour
LKR 148,000.00
For Early Booking
Travel Date: 19 - 23 May 2023
Semba
Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799

காலைக்கதிர் Kalaikkathir




# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL




### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 25 திங்கட்கிழமை 08.05.2023 கதிர் 52

## தொல்பொருள் சிலையை கடத்திய 3 பேர் சிக்கினர்!

தொல்பொருள் எனச் சந்தேகிக்கப்படும் சிறிய வகை விக்கிரகம் ஒன்றுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதான வீதி பாலத்தடியில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து, பஸ்ஸில் பயணித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார், எருக்கலம்பிட்டி பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்களும், ஆண் ஒருவருமே கைதாகியுள்ளனர். (02)

## மலேசிய மாதிரி மூலமாக பொருளாதார மறுமலர்ச்சி

### ஐக்கிய மக்கள் சக்தியிடம் திட்டம் இருக்கிறதாம்

தென்கொரியா, மலேசியா ஆகிய நாடுகளை மாதிரியாகக் கொண்ட பொருளாதார மறுமலர்ச்சித் திட்டம் ஒன்றை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டிருக்கின்றது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹபீர் ஹசீம் தெரிவித்தார்.

மொனராகலையில் திங்கட்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நெருக்கடியான நிலைமைகள் தொடங்கிய உடனேயே எம்மவர்கள் இணைந்து திட்டமொன்றைத் தயாரித்து ஆளும் தரப்பிடம் வழங்கினார்கள்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை முன்னெடுக்கவேண்டும். அதற்காக அவர்களது நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை, எமது தேவைகளை உள்ளடக்கிய கோரிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுவோம் என்று குறிப்பிட்டோம். ஆனால் அதனை ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

எமக்கு நாளை அதிகாரம் கிடைத்தால் நாட்டைக் கட்டியெழுப்புவது எவ்வாறு, தொழில்துறைகளை மேம்படுத்துவது எவ்வாறு, உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வது எவ்வாறு, ஏற்றுமதிகளை அதிகரிகச் செய்வது எவ்வாறு, டொலர் கையிருப்பை அதிகரிக்கச்செய்வது எவ்வாறு என்பதை தீர்மானித்து அதற்கான வேலைத்திட்டத்தினை இப்போதே முன்னெடுத்துள்ளோம்.

நாம், ஆசிய வலயத்தில் உள்ள தென்கொரியா, மலேசியா போன்ற நாடுகளை முன்மாதிரியாகக் கொண்டுள்ளோம். 1998ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லாமல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு மலேசியாவுக்கு இயலுமாக இருந்தது.

அவர்கள் நுட்பமான பயனுள்ள நடவடிக்கைகளைக் கையாண்டார்கள். சர்வதேச சந்தையில் அதேபோன்ற மாதிரிகளைப் பயன்படுத்தி எமது நாட்டுக்கு அதனை பொருந்துமாறு மாற்றியமைத்து இலங்கையை பொருளாதார ரீதியாக மேம்பட்டதாக முன்னேற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியாக நாம் திட்டமொன்றைக் கொண்டுள்ளோம் – என்றார்.

## கோட்டாவை ஜனாதிபதி ஆக்கியமைக்காக

# மக்களிடம் மன்னிப்பு கேட்டார் பவித்திரா



### இரத்தினபுரியில் ஞாயிறன்று சம்பவம்

கோட்டாபாயவை ஜனாதிபதியாக்கியமைக்கான மன்னிப்புக் கோருகின்றோம் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மக்களிடம் மன்னிப்புக் கேட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஜனாதிபதியை எங்களுடைய 134 பேர் இணைந்துதான் கொண்டுவந்தோம்.

அவர் சரியான பாதையில் பயணிக்கின்றார். நாட்டை வழிநடத்துகின்றார்.

நாங்கள் மாற்றத்தை உருவாக்கு-வதற்காக ஜனாதிபதியாகக் கோட் டாபயவைக் கொண்டுவந்திருந்தோம்.

ஆனால் அந்தத் தீர்மானம் தவறானது என்பதை உணர்கின்றோம். எமது பக்கத்தில் தவறிழைக்கப்பட்டுள்ளது. அதற்காக நாம் மன்னிப்புக்கோருகின்றோம்.

கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட தவறுகளைச் சரிசெய்துகொள்ள வேண்டும். எதிர்காலம் நோக்கி நாம் சிந்திக்கவேண்டும்.

கடந்த காலத் தவறுகளை மீண்டும் மீண்டும் பேசிக்கொண்டிருப்பதால் எந்தவிதமான பயனுமில்லை. ஆகவே நாம் அவற்றை திருத்திக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். எதிர்காலத்தில்நாட்டின் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்காக நாம் டொலர்களை உள் ஈர்க்க வேண்டும்.

அதற்காக வெளி நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணி களை வரவழைக்க வேண்டியுள்ளது – என்றார்.

### ஐ.எம்.எவ். ஒப்பந்தத்தால் ஏற்படும் பாதகத்துக்கான

## பொறுப்பை அடுத்தவர் மீதும் சுமத்தவே நாடாளுமன்ற அனுமதி பெறும் நாடகம்

### பேரா. ஜி.எல்.பீரஸ் ஆட்சியாளர்கள் மீது குற்றச்சாட்டு

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டது இந்த ஆட்சிதான். ஆனால் அதன் பாதகங்களுக்குப் பொறுப்பேற்காமல், அந்தப் பொறுப்புக்களை எல்லோர் தலையிலும் சுமத்துவதற்காகத்தான் நாடாளுமன்றத்தில் அந்த ஒப்பந்தத்திற்கு அனுமதி பெறப்பட்டது என்று சுதந்திர மக்கள் சபையின் அங்கத்தவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இராஜகிரியவில் உள்ள அக்கட்சியின் அலுவலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்;ட கடன் வசதிக்கான ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்து நாடாளுமன்ற அனுமதியைப் பெறவேண்டும் என்ற எந்த நிபந்தனையும், காட்டாயமும் கிடையாது. அது சம்பிரதாயமும் இல்லை. ஆனால், குறித்த நீடித்த கடன்வசதிக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த முற்படுகின்றபோது அவற்றில் ஒருசில மக்களின் விரும்பப்படாதவையாக மாறும் என்பது ஆட்சியாளர்களுக்குத் தெரியும். அதனால் சமூக மட்டங்களிலிருந்து பெரும் எதிர்ப்புக்கள் ஏற்படும் என்பதையும் ஆளும் தரப்பு அறியும். அதைச் சமாளிப்பதற்காகத்தான் ஆட்சிப் பொறுப்புக்களை மற்றவர்களுடனும் பகிர்ந்துகொள்ள வேண்டிய தேவை இன்றைய ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது..

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்திற்கான முழுப் பொறுப்பையும் ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளாது அதனை நாடாளு மன்றத்திடம் ஒப்படைப்பதானது, நாடாளுமன்ற சம்பிரதாயம் மற்றும் சட்டத்திற்கு முரனாண செயல்.

சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்வது சரியா தவறா என்பதற்கு அப்பால் சென்றதன் பின்னர் உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் சீர்திருத்தங்களே முக்கியமானவையாகின்றன. திறந்த கலந்துரையாடல், பரந்துபட்ட திட்டமிடல் என்பன மிகவும் முக்கியமாகின்றன. ஆனால் ஆளும் தரப்பு அந்த விடயங்களைப் பொருட்படுத்தாது எந்தவொரு விடயத்தையும் சரியாக முன்னெடுக்காதுள்ளது.

ஏனைய நாடுகளில் இவ்விதமான நிலைமைகள் ஏற்பட்டபோது, உதவிகளைப் பெற்ற நாடுகள், மக்களுக்கு தேவையான நிவாரணங்கள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொண்டன. ஆனால் இலங்கையில், சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்றிட்டங்களை ஆட்சியாளர்கள் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுப்பதற்கு விரும்பவில்லை. அதனைத் தமது கட்சி ரீதியான செயற்பாடாகவே அவர்கள் முன்னெடுக்கப் பார்க் கிறார்கள்.

மக்களின் தேவைகளை நிவர்த்திசெய்யக்கூடிய தேசிய வேலைத்திட்டமாக அதனை முன்னெடுக்கவில்லை.

மாறாக கட்சிக்கும், கட்சியின் தலைவருக்கும் நன்மைகளை ஈட்டக்கூடிய வகையில் தான் சர்வதேச நாணய நிதியம் பற்றி கலந்துரையாடல் நடத்தப்படுகின்றன – என்றார்.

## வடக்கில் புதிய விகாரைகள் கட்டுவது தமிழர்களை விரட்டியடிக்கும் உத்தியா?

### முன்னாள் எம்.பி. சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி

வடக்கின் பல பகுதிகளில் பல்வேறு யுக்திகளைக் கையாண்டு புதிதாகக் கட்டப்படும் புத்த கோயில்கள் தமிழர்களை அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்தும் விரட்டியடிப்பதற்கான முயற்சியா என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இலங்கை சுதந்திரம் அடைந்தபொழுது டொனமூர் அரசமைப்புச் சட்டம் நடைமுறைல் இருந்தது. சிறுபான்மை இனத்திற்கு எதிராக எந்தச் சட்டமும் கொண்டுவரக்கூடாது என்று அந்த அரசமைப்பில் 29ஆம் சரத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்த 29ஆவது சரத்து இருக்கத்தக்கதாகவே ஒட்டுமொத்த மலையக தமிழர்களின் வாக்குரிமையையும் பறித்து அவர்கள் நாடற்றவர்களாகப்பட்டார்கள். மேலும் அவர்களது சிவில் அரசியல் சமூக உரிமைகளும் மறுதலிக்கப்பட்டது.

இதன்பின்னர், தென்பகுதியில் இருந்த தமிழ் மக்களின் வர்த்தகங்களை குறிவைத்து அவற்றை இல்லாமல் செய்யும் வகையில் 1956, 1977, 1981, 1983 போன்ற பல சந்தர்ப்பங்களில் தென்பகுதியில் இருந்த வடக்கு-கிழக்கு தமிழர்கள் மாத்திரமல்லாமல் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் மக்களும் அவர்களது தாயகப் பகுதியான வடக்கு-கிழக்கிற்குக் கப்பல் மூலமும் விமானம் மூலமும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

இப்பொழுது வடக்கு-கிழக்கைக் குறிவைத்து

2

### ராஜபக்சக்களுக்கு எதிரான மனு விசாரணைக்கு ஏற்பு

மஹிந்த ராஜபக்ச , பஸில் ராஜபக் உள்ளிட்டோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமீறல் மனுவை ஜூலை 5 விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. குறித்த மனு இன்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக விசாரணை நடத்த உத்தரவிடுமாறு கோரி இந்த அடிப்படை உரிமை மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரணிலைக் கைவிடுமா மொட்டு?

### சாகர எம்.பி. விளக்கம்




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை விலக்கிக்கொள்வது தொடர்பில் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அறிவித்துள்ளது.

மொட்டுக் கட்சியின் ஊடக சந்திப்பு அக்கட்சியின் தலைமையகத்தில் இன்று நடைபெற்றது. இதன்போதே அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன்தான் தற்போதைய அரசு செயற்படுகின்றது.

எமது கட்சிக்கு மக்கள் ஆணைவழங்கியுள்ளனர். அந்த ஆணையை மீறும் வகையில் ஜனாதிபதி செயற்பட்டால்தான் எமது கட்சியால் தீர்மானமொன்று எடுக்கப்படும். எனினும், ஜனாதிபதி அவ்வாறு செயற்படவில்லை. அரசில் இருந்து வெளியேறுவதற்கான தேவையும் எமது கட்சிக்கு எழவில்லை. – என்றார். (02)



### மண்டைதீவில் 85 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியில் 85 கிலோ கஞ்சா இன்று பகல் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்றது.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட கஞ்சா மண்டைதீவில் யாரும் அற்ற பகுதியில் மறைத்து வைத்திருப்பதாக கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து

2

### பதவி விலகச் சொல்லவில்லை என்கிறார் வடமாகாண ஆளுநர்



தம்மை பதவியில் இருந்து விலகுமாறு எந்த அறிவுறுத்தல்களும் ஜனாதிபதி தரப்பில் இருந்து தமக்கு தெரியப்படுத்தப்படவில்லை என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் உள்ளிட்ட நான்கு ஆளுநர்களை பதவி விலகுமாறு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அறிவுறுத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இதுதொடர்பில் கருத்துக் கேட்டபோதே வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அப்படிப்பட்ட அறிவுறுத்தல் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்றார்.

## தலைமன்னார் – ராமேஸ்வரம் கப்பல் சேவைக்கு வலியுறுத்து

### வரலாற்று விவரங்களோடு காணொலியும் வெளியீடு

(ந.லோகதயாளன்)

தலைமன்னார் ராமேஸ்வரம் இடையில் கப்பல் சேவையை விரைவு படுத்துமாறு மன்னார் மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் காணொலி ஆவணம் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி , யாழ் இந்திய துணைத்தூதர், வடக்குமாகாண ஆளுநர் ஆகியோருக் கும் மாவட்ச் செயலர் ஊடாக இந்தக் கோரிக்கையும் காணொலியும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மன்னார் ரோட்டரி கழகத்தின் அனுசரணையில் மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகன் இந்தக் காணொலியை அனுப்பியிருந்தார். தலைமன்னார் இராமேஸ்வரம் இடையில் கப்பல் போக்குவரத்தை விரைவுபடுத்த கோருவதற்கான நியாயப்பாடுள் இந்தக் காணொலியில் விவரிக்கப்பட்டுள்ளன. பண்டைய காலத்தில் மன்னார் மாவட்டம் எவ்வாறு சிறப்புடன் இருந்தது என்பதை இலக்கிய நூல்கள் மூலம் ஆய்வுசெய்து உருவாக்கப்பட்ட இந்தக் காணொலி இருவெட்டு இன்று காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலர் அ.ஸ்ரான்லி டிமெலிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

இலக்கிய நூல்களின் பிரகாரம் ஆதிகாலத்தில் பொருளாதாரத்திலும் வாழ்வியலிலும் மிகச் சிறப்பாக விளங்கிய மன்னார் மாவட்டம் தற்போது பொருளாதாரம் வீழ்ச்சியுற்று பின்தங்கிய மாவட்டமாக காணப்படுவதற்கான காரணங்களும் இந்தக் காணொலியில் விளக்கப்பட்டுள்ளன.

மன்னாரில் துறைமுகம் இயங்கியபோது பொருளாதாரத்தில் சிறந்திருந்த மன்னார் மாவட்டம் துறைமுகம் மூடப்பட்ட பின்னர் பொருளாதாரத்தில் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்ற உண்மையும் காணொலியில் உரத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.

.அத்துடன் அதே இலக்கிய நூல்களின் ஆதாரத்துடன் மன்னார் கட்டுக்கரை பகுதி பழங்காலத்தில் பெரும் வரலாற்று வியாபார பண்பாட்டுப் பெருநகரமாக இருந்துள்ளது என்பதும் கூறப்பட்டுள்ளது .

## வடக்கில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்குள்ள புராதன சைவ ஆலயங்களை உடைத்து, நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி, தான்தோன்றித்தனமான முறையில், தனிநபர்களின் காணிகளையும் கபளீகரம் செய்து, அவற்றில் புத்தகோயில்களைக் கட்டுவது மாத்திரமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள பலநூறு ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து அதற்கு இராணுவ பாதுகாப்பையும் வழங்கி தொடர்ச்சியாக சிங்கள குடியேற்றங்களையும் செய்து வருகின்றார்கள்.

இவ்வாறு போருக்குப் பின்னர், அம்பாந்தோட்டை போன்ற தூரப் பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்களை வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் குடியேற்றி வருகின்றார்கள்.

கிழக்கில் ஏற்கனவே முக்கியமான பகுதிகளில் மிகப்பெருமளவு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய சிங்கள பிரதிநிதித்துவங்களும் உருவாக்கப்பட்டுவிட்டன.

இப்பொழுது வடக்கு மாகாணத்தில் மீண்டும் ஒருமுறை தமிழீழக் கோரிக்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருக்க வேண்டும் என்றால் வடக்கு மாகாணத்தின் மக்கள் தொகையில் 25வீதம் சிங்கள மக்களாக இருக்கவேண்டும் என அரச மற்றும் படைத்துறை உயர் மட்டங்கள் முடிவெடுத்துச் செயற்படுகின்றன.

இதன் வெளிப்பாடாகவே வடக்கு-கிழக்கில் 1000 விகாரைகளைக் கட்டுவதற்கு 2018ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் கோடிக்கணக்கான நிதி ஒதுக்கப்பட்டது.

இதன் மூலம் வடக்கின் குடிசனப் பரம்பலை மாற்றி அவர்களது நாடாளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து வடக்கை ஒரு கலவர பூமியாக மாற்றி தமிழ் மக்களை அங்கிருந்தும் விரட்டுவதே மாறிமாறி ஆட்சிக்கட்டிலில் ஏறும் இலங்கை அரசியல்வாதிகளின் நோக்கமாக இருக்கின்றது. ஏற்கனவே போர் காரணமாக ஏறத்தாழ 1.5 மில்லியன் மக்கள் அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்து விரட்டப்பட்டுவிட்டார்கள்.

இலங்கை அன்னிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமென்பதற்காக தமிழ் மக்களும் இன மத பேதமின்றி போராட்டக் களத்தில் முன்னின்று போராடினார்கள்.

அந்தக் காலத்தில் தமிழ் மக்கள் தனிநாட்டிற்காகவோ அல்லது சுயாட்சிக்காகவோ போராடவில்லை. ஆனால் சுதந்திரமடைந்ததன் பின்னர், சிங்கள அரசியல் தலைமைகள் கொண்டுவந்த தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை சட்டதிட்டங்களும் மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, அபிவிருத்தி போன்றவற்றில் காட்டிய பாரபட்சமும், தமிழ் மக்களை அவர்களது சொந்தப் பிரதேசங்களில் இருந்து விரட்டி விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழ் மக்களின் இருப்பையும் அவர்களின் தனித்துவத்தையும் இல்லாமல் செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சீகளுமே தமிழ் மக்களை சுயாட்சிக்காகவும் பின்னர் தனிநாட்டிற்காகவும் போராடும் சூழ்நிலைக்குத் தள்ளியது.

இலங்கையின் தென்பகுதியில் இன மோதல்களை உருவாக்கி, தமிழர்களுக்கு அவர்களது தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்குதான் பாதுகாப்பான பிரதேசம் என்ற அடிப்படையில் அவர்களை வடக்கு-கிழக்குப் பிரதேசத்திற்கு விரட்டியடித்ததுடன் அரசே கப்பல்கள் மூலம் தமிழ் மக்களை அப்பிரதேசங்களுக்கு அனுப்பியும் வைத்தது. இவ்வாறான நடவடிக்கைகள் இலங்கை அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடாக வலியுறுத்தப்பட்டதுமான எமது தாயகபூமியான வடக்கு-கிழக்கிலிருந்தும் அரசின் நடவடிக்கையினூடாக நாம் விரட்டியடிக்கப்பட்டால் நாம் எங்கே செல்வது?

உலகின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமெனவும் சிறுபான்மை தேசிய இனங்கள் பாதுகாக்கப்படவேண்டும் எனவும் பழங்குடியின மக்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் அழிவிலிருக்கின்ற உயிரினங்களும் தாவர இனங்களும் காப்பாற்றப் படவேண்டும் என்றும் குரலெழுப்பும் ஐ.நா. சபையும் சர்வதேச சமூகமும் இலங்கை அரசின் இவ்வாறான விடயங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதும் கண்டிக்காமல் இருப்பதும் இலங்கை அரசின் தமிழர் விரோத செயற்பாட்டிற்கு உலக நாடுகளும் ஐ.நா. சபையும் துணைபோகின்றதா என்ற அச்சத்தையும் கேள்வியையும் எழுப்பியுள்ளது.

இப்பொழுது, வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி, மிகப்பெருமளவிலான வேகமான சிங்கள பௌத்த மயமாக்கல் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவம் காப்பாற்றப்படவேண்டுமாக இருந்தால், அவர்களின் இருப்பு காப்பாற்றாப்படவேண்டுமாக இருந்தால், அவர்களின் மொழி, கலாசாரம், பண்பாடு பாதுகாக்கப்படவேண்டுமாக இருந்தால் அரசு தனது சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனைகளைக் கைவிட்டு சகல இனங்களும் இந்த மண்ணில் தமது சொந்தப் பிரதேசங்களில் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக இந்தியா இந்த விடயங்களில் தனது தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும் - என்றுள்ளது.

# உள்ளூராட்சி, மாகாண சபைகளின் தேர்தல்கள் இந்த வருட இறுதிக்குள்

## சர்வதேசத்துக்கு ஜனாதிபதி வாக்குறுதியாம்

இந்தவருட இறுதிக்குள் இரண்டு தேர்தல்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும், அடுத்து மாகாண சபைத் தேர்தலையும் நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என்று அறியமுடிகின்றது.

இந்தத் தேர்தலை நடத்துவது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துக்கும் இந்தியாவுக்கும் ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியுள்ளார் என்று ஜனாதிபதி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா அவ்வப்போது இலங்கை அரசை வலியுறுத்தி வருகின்றது. இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் உதவி தொடர்ச்சியாகத் தேவை என்பதால் அந்த நாட்டின் கோரிக்கையை நிராகரிக்க முடியாத நிலையில் இலங்கை அரசு உள்ளது.

இதனால் இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார் என்றும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நடத்தியது போல் துண்டு துண்டாக அந்தத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அறியமுடிகின்றது.

அந்தவகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தலை முதலில் நடத்தும் திட்டம் ரணிலிடம் உள்ளது என அரச தகவல்கள் கூறுகின்றன.

அதேபோல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கியுள்ளார் என்றும் அறியமுடிகின்றது. (02)

# நாடு திரும்பினார் ரணில்; அதிருமா அரசியல் களம்?



பிரிட்டன் மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவில் பங்கேற்க இலண்டன் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று காலை நாடு திரும்பினார்.

டுபாயில் இருந்து வந்த எமிரேட்ஸ் ஏர்லைன்ஸின் ஈ.கே. 650 என்ற விமானத்தில் இன்று காலை 8.30 மணியளவில் அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமை, மன்னர் சார்ள்ஸ் முடிசூடியதுடன், இந்த அரச நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை இலண்டன் பயணமானார்.

ஜனாதிபதி இலண்டனில் இருந்து நாடு திரும்பியவுடன் அரசியல் களத்தில் அதிரடிகள் இடம்பெறும் என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (02)

# நீராடச் சென்ற ஜோடி மாயம்!

அத்தனகலு ஓயாவின் கிளையான எல் ஓயாவில் நீராடச் சென்ற போது திருமணம் செய்யவிருந்த ஜோடியினர் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயுள்ளனர்.

இவர்கள் வெயாங்கொடை, மெதவத்தை பிரதேசத்தில் இருந்து எல் ஓயாவில் குளிப்பதற்கு வந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெயாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரும், குடாஓயா, லபுதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய யுவதியுமே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

காணாமல்போனவர்களைத் தேடும் நடவடிக்கையில் வெயாங்கொடை பொலிஸ் அதிகாரிகள், பிரதேசவாசிகள், இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். (02)

# ஹற்றன் நகரத்தில் அன்னதானம்





இலங்கையில் வெசாக் தினம் தற்போது நாடுமுழுவதும் கொண்டாடப்பட்டுவருகின்றது. இதனை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் காணப்படும் பௌத்த வணக்கஸ்தலங்களில் விடே வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக மலையகத்தின் ஹற்றன் நகரத்தில் அன்னதானம் (புத்தன்சல்) வழங்கபட்டது.

இந்த அன்னதான நிகழ்லில் இன மத பேதமின்றி, நகர மற்றும் கிராம மக்கள் தோட்டப்புற மக்கள்ச ஹற்றன் பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகள்ச உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# நண்பர்களுடன் உடல் உறவு வைக்க மனைவியை வற்புறுத்திய கணவன்

## முறைப்பாட்டையடுத்துக் கைது

ஆபாசத் திரைப்படங்களில் வரும் பாலியல் காட்சிகள் போன்று செயற்படுமாறு தனது மனைவியை வற்புறுத்திய கணவனை வெல்லம்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஐஸ் போதைப்பொருளுக்கு அதிக அடிமையாகியுள்ள இந்தச் சந்தேகநபர் ஆபாசப் படங்களுக்கும் அடிமையாகியுள்ளார்.

அந்தப் படங்களில் உள்ள பாலுறவு சைகைகளைப் பின்பற்றி தமது நண்பர்களுடன் உடலுறவு கொள்ள வேண்டுமென சந்தேகநபரான கணவர், மனைவியை நிர்ப்பந்தித்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச்சந்தேகநபரின் அழுத்தத்தை தாங்க முடியாமலேயே அவரது மனைவி வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (02)

# கல்முனை பஹ்ரியாவின் பவளவிழா விளையாட்டுப் பெருவிழா ஆரம்பம்!







கல்முனை கல்வி வலய மூத்த பாடசாலைகளில் ஒன்றான கமுஃகமு-ஃஅல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் 75 ஆவது ஆண்டு பவளவிழாவை முன்னிட்டு பாடசாலை சமூகத்தால் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் பெருவிழா நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை மாலை மிக விமரிசையாகப் பாடசாலை அதிபர் எம்.எஸ்.பைசால் தலைமையில் பாடசாலை மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், பாடசாலை பழைய மாணவருமான கலாநிதி எம்.சி.அலிவூட்டோ கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால் கலந்துகொண்டார். பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ஏ.அஸ்தர், எம்.ஏ சலாம், உதவி அதிபர் ஐ.றினோஸ், ஆசிரியர் ஏ.எல் பஸ்மின், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் எஸ்.எல் ஹமீட், பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.ஐ.எம் ஜிப்ரி உட்பட பலரும் கலந்துகொண்டனர். பாடசாலையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ்வருடம் முழுவதும ாக இரத்த தான முகாம்கள், பழைய மாணவர்களின் அணிகள் பங்குகொள்ளும் கிரிக்கட் சுற்றுப்போட்டி, உதைப்பந்தாட்டம், கரபந்தாட்டம், கலை, கலாசார நிகழ்வுகள், சாதனையாளர்கள் கௌரவிப்பும் பரிசளிப்பு வைபவங்கள், மேலங்கி அறிமுகம், பெண் பழைய மாணவிகளின் நிகழ்வுகள் என பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வடக்கு – கிழக்கு குறித்த பேச்சுகளுக்கு முஸ்லிம் பிரதிநிதிகளையும் அழைக்குக

## ஜனாதிபதிக்கு மீஸான் பௌண்டன் ஸ்ரீலங்கா கோரிக்கை

வடக்கு - கிழக்கு இனப் பிரச்சினை பேச்சு மேசைக்கு முஸ்லிம் பிரதிநிதிகளையும் அழைக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிழக்கை தளமாக கொண்ட சிவில் அமைப்பான அல்-மீஸான் பௌண்டன் ஸ்ரீ லங்கா அமைப்பு கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது. அவர்கள் ஜனாதிபதிக்கு முன்வைத்துள்ள கோரிக்கையில் மிக நீண்டகாலமாகத் தொடரும் வடக்கு கிழக்கு இனப் பிரச்சினைத் தீர்வுக்காக ஜனாதிபதி எடுத்திருக்கும் முயற்சி இலங்கையர்கள் எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியது என்றும் அழகிய இலங்கைத் தீவை முன்னேற விடாமல் தடுக்கும் காரணங்களில் இனப்பிரச்சினை முக்கியத்துவம் பெறுகிறது. அதை தீர்த்து நாட்டை முன்னேற்ற ஜனாதிபதி எடுக்கும் முயற்சிக்கு நன்றிகளும், பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேலும் இம்மாதம் 11,12,13 ஆம் திகதிகளில் வடக்கு கிழக்கு மாகாண இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காணும் நோக்கில் ஜனாதிபதியின் முயற்சியாக வடக்கு – கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சு ஒன்று நடைபெற உள்ளதாகவும் அது காலத்தின் தேவையாகவும் அமைந்துள்ளதாகவும் அந்த பேச்சுக்கு வடக்கு கிழக்கில் உள்ள மற்றும் ஒரு தேசிய இனமான முஸ்லிங்களையும் அழைத்து அவர்களின் கருத்துக்களையும், பிரச்சினைகளையும் கேட்பது நீடித்த, உறுதியான தீர்வுக்கு வழி சமைக்கும் என்று நம்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் இலங்கையின் அதிசிரேஷ்ட அரசியல் தலைவரான ஜனாதிபதிக்கு வடக்கு- கிழக்கில் வாழும் முஸ்லிங்களும் இனவாத, மதவாத, பிரதேசவாத செயற்பாடுகளால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமை நன்றாகத் தெரிந்திருக்கும் என்றும் இவற்றை மையமாக கொண்டு நடைபெறும் பேச்சில் வடக்கு-கிழக்கில் உள்ள முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இம்மாதம் 11,12,13 ஆம் திகதிகளில் நடைபெற உள்ள வடக்கு கிழக்கு மாகாண இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பேச்சுக்கு அழைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதுடன் அந்தக் கடிதத்தின் பிரதிகளை பிரதமர், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, தேசிய காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்றோருக்கும் மேலதிக நடவடிக்கைக்காக பிரதியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் 15 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா!

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பதினைந்தாவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் மே மாதம் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபுவக்கர் தலைமையில் வேந்தர் கௌரவ பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்முறை பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் இரண்டு நாள்களுக்கு ஐந்து அமர்வுகளாக நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளன.

முதல் அமர்வில் கலை கலாசார, தொழில்நுட்ப பீடங்களைச் சேர்ந்த 395 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இரண்டாவது அமர்வில் முகாமைத்துவ – வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த 371 மாணவர்களும், மூன்றாவது அமர்வில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 380 மாணவர்களும் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

இரண்டாம் நாள் அமர்வில் (நான்காவது அமர்வில்) பிரயோக விஞ்ஞானங்கள், பொறியியல் ஆகிய பீடங்களைச் சேர்ந்த 332 மாணவர்கள் பட்டங்கள் பெறவுள்ளனர். ஐந்தாவது அமர்வில் கலை கலாசார, முகாமைத்துவ – வர்த்தக பீடங்களில் இணைந்து கல்வி கற்ற 374 வெளிவாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம், வியாபார நிர்வாகம், முகாமைத்துவம், தமிழ் உள்ளிட்ட துறைகளில் பட்டப்பின்படிப்புக்களை நிறைவு செய்த மாணவர்களுக்கான முதுமாணி, முதுதத்துவமாணி பட்டங்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நாட்டில் நிலவுகின்ற கொவிட்-19 அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, பட்டமளிப்பு விழா நிகழ்வுகளை சுகாதார வழிகாட்டலுக்கமைய நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

# திருக்கோவில் கல்வி வலய மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு





மாணவர்களின் கல்விக்கு வறுமை தடையாக அமையக்கூடாது என்ற நோக்கில் இணைந்த கரங்கள் அமைப்பால் நாடு தழுவியரீதியாக பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை என்பன வழங்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக அம்பாறை மாவட்ட திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் அதிகஷ்ட மற்றும் தொழில் வாய்ப்பற்ற குறைந்த வருமானத்தில் வாழும் குடும்ப மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கமு/திகோ/ஊறணி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கும், பொத்துவில் கமு/திகோ/இன்ஸ்பெக்டர் ஏத்தம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை என்பன இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ. கஜரூபன், எஸ்.காந்தன், சி.துலக்சன், மா. ஜெயநாதன், தி.சதீஸ்குமார். ஆகியோர் கலந்துகொண்டு வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் கமு/திகோ/இன்ஸ்பெக்டர் ஏத்தம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் க. சந்திரகாசன் மற்றும் ஆசிரியர் க. கருணாகரன், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கொக்கிளாய் மாணவர்களுக்கு கற்றல் கருவிகள் வழங்கிவைப்பு







முல்லைத்தீவு–கொக்கிளாய் அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கு கடந்த சனிக்கிழமை கற்றல் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ சீரடி சாயிபாபா ஆலயம் – தூண் சுவிஸ்லாந்து நிர்வாகத்தினராலேயே இவ்வாறு கற்றல் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு கொக்கிளாய் அ.த.க. பாடசாலையின் முதல்வர் கணேசலிங்கம் தனேஸ்வரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

அந்தவகையில் நிகழ்வில் விருந்தினர்களது உரைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து, 94 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

புலம்பெயர்ந்து சுவிற்ஸர்லாந்து நாட்டில் வசிக்கும் கேதீஸ்வரன் ரோகினி தம்பதியரின் புதல்வி சைந்தவியினுடைய 24ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, ஸ்ரீசீரடி சாயிபாபா ஆலயம் –தூண் சுவிற்ஸர்லாந்து நிர்வாகத்தினர் குறித்த கற்றல் கருவிகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கிவைத்தனர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கு மதியபோசனமும் வழங்கப்பட்டது.

மேலும் இந்நிழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கவிஞர் புரட்சி, சமூக ஆர்வலர் சிவஸ்ரீ க.நவரத்தினம், தமிழரசுக்கட்சியின் கரிக்கட்டுமூலை தெற்கு வட்டாரக் கிளையின் செயலாளர் கந்தசாமி ஜெயராஜ் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹப்புத்தளை பத்கொட பகுதியில் பவுஸர் விபத்து!





ஹப்புத்தளை பத்கொட பகுதியில், கடந்த சனிக்கிழமை அதிகாலை எரிபொருள் கொள்கலன் ஊர்தி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதிகாலை 2.30 மணியளவில், இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து, 33 ஆயிரம் லீற்றர் டீசலுடன் ஹப்புத்தளை நோக்கிப் பயணித்த குறித்த எரிபொருள் கொள்கலன் ஊர்தி, வீதியை விட்டுவிலகிச் சென்று அருகில் உள்ள வீடொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, காயமடைந்த குறித்த பவுஸரின் உதவியாளர் பங்கட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் தியத்தலாவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த விபத்தால், குறித்த வீட்டுக்கு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில், வீட்டிலுள்ளவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். இந்த விபத்தால், குறித்த டீசல் கொள்கலனில் கசிவு ஏற்பட்டதை அடுத்து, அதிலிருந்து டீசல் வெளியேறுவதாகவும், குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவானோர் அதனை நிரப்பிச் செல்வதை அவதானிக்க முடிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஊழலுக்கு எதிரான உறுதியான தலைமைத்துவத்தின் அவசியம்

ஊழல் அரசியல்வாதிகளைக் கட்டுப்படுத்தும் தலைமைத்துவம் கிடைக்காத வரையில் ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்காக எந்தவிதமான சட்டங்களைக் கொண்டு வந்தும் பயனில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏர்சன ராஜகருணா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் ஊழல் தடுப்புச் சட்டமூலம் விவாதத்திற்கு உள்ளாக்கப்படவுள்ள நிலையில் அவரது கருத்து வந்துள்ளது.

அவரது கருத்தில் 100 சதவீதம் உண்மையிருக்கின்றது. ஊழல் மோசடிகளைத் தடுப்பதில் வெறும் வாய் வார்த்தைகளும் சட்டங்களும் மட்டும் காரியம் சாதித்துவிடமாட்டா. அதற்கு உரிய தலைமைத்துவம் கிடைக்கவேண்டும். அர்ப்பணிப்போடு அது குறித்து செயற்படும் தூரநோக்குள்ள தலைமைத்துவம், எந்தகைய எதிர்வினைகள் வந்தாலும் தான் எடுத்துக்கொண்ட பணியை நிறைவேற்றி முடிக்கும் துணிபு அந்தத் தலைமைக்குவேண்டும். அப்போதுதான் ஊழலை ஒழிக்க முடியும்.

அப்படி ஊழலை ஒழிக்க வேண்டும் என்றால், அதற்கு ஓர் அரசியல் தலைவர் தயாராக இருக்கின்றார் என்றால் அவர் முதலில் அரசியல் இயந்திரத்தில் இருந்துதான் சீர்திருத்தத்தைத் தொடங்க வேண்டியிருக்கும். ஏனெனில் பெருமெடுப்பிலான ஊழலும் மோசடியும் அரச இயந்திரத்தினுள் அரசியல்வாதிகளினாலேயே அரங்கேற்றப்படுகின்றது.

இன்றுஇந்தச்சட்டத்தைக்கொண்டுவரும்அரசியல் தலைவர்களே 2015ஆம் ஆண்டும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி ஆட்சியைப் பிடித்தார்கள். அன்று தலைமை அமைச்சராக இன்றைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே இருந்தார். நீதி அமைச்சராக இன்றைய அமைச்சர் விஜயதாச ராஜபக்சவே இருந்தார். ராஜபக்சக்களின் ஊழலுக்கு எதிராக திடமான, தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஊழல் மோசடிக் குற்றத்துக்காக இதுவரையில் ஒருவர் கூடத் தண்டிக்கப்படவில்லை.

இத்தகைய மோசடிக் குற்றங்களை விசாரிப்பதற்கெனப் புதிய பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இந்தக் குழுவால் ஒருவருக்கூட தண்டனை வாங்கிக் கொடுக்க முடியவில்லை. ராஜபக்சக்கள் மீது சுமத்தப்பட்ட பல மோசசடிக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் அவர் பெரும்பாலும் விடுவிக்கப்பட்டுவிட்டார்கள்.

இன்று, ஊழல்மோசடிக்குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் குற்றஞ்சாட்டியவர்களும் சேர்ந்தேதான் ஊழல் மோசடிக் ககுற்றச்சாட்டைச் சுமத்தியவர்களும் சேர்ந்தே ஆட்சியமைத்திருக்கிறார்கள். அதாவது ஊழல் மோசடிக் குற்றஞ்சாட்டுக்குள்ளானவர்களின்தயவில்தான் இன்றைய ஆட்சி ஓடிக்கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட நிலையில் ஊழல் தடுப்புச் சட்டத்தால் மட்டும் இலங்கையில் ஊழலையோ மோசடியையோ தடுத்துவிட முடியாது. அதற்கு அரசியல் மாற்றம், அரசியல் சிந்தனை மாற்றம் ஒன்று தேவை.

அத்தகைய தலைமைத்துவம் இல்லையாயின், பன்னாட்டுச் செலாவணி நிதியம் (ஐஎம்எவ்) நிபந்தனைகளுக்காக மட்டுமே இந்தச் சட்டங்கள் இயற்றப்படுவதாக இருக்குமே தவிர வேறு பயன் ஏதும் இருக்காது.

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆயுர்வேத,பாரம்பரிய வைத்திய மேம்பாட்டில் ஆர்வம்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் ஆயுர்வேத மற்றும் பாரம்பரிய வைத்திய துறைகளை கட்டியெழுப்பதற்காக பல்வேறு ஆராய்ச்சிகள் உற்பத்திகள் தொழில்சார் பிரேரணைகள் என பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இதன் தொடர்ச்சியாக கைரளிய வர்மா மற்றும் களரி சிகிச்சைகளை கல்முனை சுகாதாரப்பிராந்தியமக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக இந்தியாவின் கேரள வர்மக்கலை விசேட வைத்திய நிபுணர் மற்றும் அவரின் குழுவினரை கொண்டு நடமாடும் சேவை நிகழ்வு அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்திய சாலையில் ஏற்பாடு செய்யப்பட்டது கல்முனைபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக் அமைவாக மிக நீண்ட நாள்களாகத் திட்டமிடப்பட்டு கல்முனை ஆயுர்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம் ஏ நபீலால் இணைப்புச் செய்யப்பட்ட குறித்த நடமாடும் சேவை அட்டாளைச்சேனை ஆயுர்வேத தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அப்துல் ஹை அவர்களினதும் அவர்களின் குழுவினரும் அர்ப்பணிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

பொதுமக்கள் இந்த நிகழ்வில் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றி இருந்தமையால் ஒரு கட்டத்தில் அட்டாளைச்சேனை ஆயுர்வேத தள வைத்தியசாலை நோயாளிகளால் நிரம்பி வழியும் அளவிற்கு சன நெரிசலைக் காணக்கூடியதாக இருந்தது. எனினும் குறித்த வைத்தியர்கள் மற்றும் குழுவினரின் சிறந்த திட்டமிடலால் நோயாளர்கள் சிறப்பாக பார்வையிடப்பட்டு அவர்களுக்கான ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டன

2023.05.07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அட்டாளைசேனை ஆயுர்வேத தள வைத்தியசாலையில் நடைபெற்ற இம்மாபெரும் நடமாடும் சேவையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து நிகழ்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். மேலும் இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய ஆயுர்வேதப் பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ. நபீல் உட்பட ஏனைய ஆயுர்வேத மற்றும் யூனாணி வைத்தியர்களும் இந் நிகழ்வில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு நடமாடும் வைத்திய சேவை நிகழ்விற்குதமது பூரணஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள்.

## கல்முனை பிரதேச செயலாளர் லியாக்கத் அலிக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை நிறுத்த கோரிக்கை

### பிரதமர் தினேஸிடம் ஹரீஸ் எம்.பி. முன்வைத்தார்

கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலிக்குவருடாந்தஇடமாற்றம் மூலம் வழங்கப்பட்ட மண்முனை தென்மேற்கு பிரதேச (பட்டிப்பளை) செயலகத்துக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை ரத்துச் செய்ய கோரி பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிஅமைச்சரான பிரதமர்தினேஷ்குணவர்தன வுக்குதிகாமடுல்லமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.



கடந்த 2021.03.01 முதல் பெரியளவிலான இடப்பரப்பையும், பல்லின சமூக பரம்பலையும்கொண்ட கல்முனைக்கு பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட ஜெ.லியாக்கத் அலி இரண்டு வருடங்கள்மட்டுமேகுறித்த சேவை நிலையத்தில் கடமையாற்றியுள்ள நிலையில் அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பது பொதுமக்கள் மத்தியில் பெரும் கவலையை அளித்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு அவரது இடமாற்றத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதமருக்கானதனது கோரிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

நிர்வாக சேவை தரம் ஒன்றை சேர்ந்த ஜெ.லியாக்கத் அலி சிறந்த நிர்வாகியாகவும், தனது பொறுப்புகளை பாரபட்சமின்றிசெய்ததன் மூலம் மக்கள் மத்தியில் நற்பெயருடன்இருப்பவர் என்றும், பல்லின சமூகங்கள் வாழும் கல்முனைகுயில் சிறந்த நிர்வாகத்தை வழங்கியவர் என்றும் மேலும் தனது கோரிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

## எருக்கலம்பிட்டி இப்றாஹிம் மறைவு கவலை தருகிறது

### மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் அனுதாபம்

மன்னார், எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் அல்ஹாஜ் முஹம்மது இப்றாஹிம் சேர் இறையடி சேர்ந்த செய்தி கவலையளிப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அன்னாரின் மறைவு தொடர்பாக அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் –

எந்தச்சந்தர்ப்பத்திலும்எல்லோருடனும் இன்முகத்துடன் பழகும் வாஞ்சையுள்ள குணமுடையவர். புன்முறுவலும் ஒரு 'சதகா' வே என்ற இஸ்லாத்தின் உயர் கோட்பாட்டுக்கு உயிரூட்டுவதாகவே அவரது செயற்பாடுகள் இருந்தன. எனது அமைச்சில் என்னுடைய இணைப்புச் செயலாளராக பணியாற்றிய காலத்தில், மக்களுடன் பழகுவதையும் அவர்களை அனுசரிப்பதிலும் மிக நேர்த்தியாக நடந்துகொண்டவர். அதேபோன்று,



மர்ஹூம் நூர்தீன் மசூர் அமைச்சராக இருந்தபொழுது, அவரது செயலாளராகவும் இருந்து நல்ல பணிகளை ஆற்றியவர்.

மேலும், அவர் ஓர் ஆசானாகவிருந்து கல்விச் சமூகத்துக்காக பெரும் பணியாற்றியவர். பல கல்விமான்கள், அரசியல்வாதிகள், ஆலிம்கள் உருவாகுவதற்கு வழி சமைத்தவர்.

மானிடத்தை நேசிப்பதில் மர்ஹூம் இப்றாஹிமிடமிருந்தமாண்பியமேஅவரை மறுமை வாழ்க்கையில் ஈடேற்றிவிடும். இந்த நம்பிக்கை என்னிடமுள்ளது. இதற்காகவே நான் பிரார்த்திக்கிறேன்.

அவரவர் தவணை வரையிலும்தான் இவ்வுலகில் ஆத்மாக்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இன்றுடன் முடிந்துபோன இப்றாஹிமின் ஆத்மாவை எல்லாம்வல்ல இறைவன் பொருந்திக்கொள்ளட்டும்.

அன்னாரின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்குமன ஆறுதலை அளிக்கஇறைவனைப்பிரார்த்திக்கின்றேன்.

மேலும், எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரின் பாவங்களை மன்னித்து, ஜன்னத்துல் பிர்தௌஸுல் அஃலா எனும் உயர்மிகு சுவனத்தை அன்னாருக்கு வழங்குவானாக..! ஆமீன்..! என்று குறிப்பிட்டுள்ளார்.

## மதவாச்சி றஷீத் பின் அப்தில்லாஹ் அரபு கல்லூரியின் பட்டமளிப்பு விழா

அநுராதபுரம், மதவாச்சி றஷீத் பின் அப்தில்லாஹ் அரபுக் கல்லூரியின் அல்–ஆலிம்களுக்கான 02 ஆவது பட்டமளிப்பு விழா நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மதவாச்சி, முகையதீன் ஜும்ஆ பள்ளிவாயலில் நடைபெற்றது.

அரபுக் கல்லூரியின் தலைவர் அல்–ஹாஜ் சஹாப்தீன் மற்றும் அதிபர் அஷ்–ஷெய்ஹ் பாயிஸ் (றாதி) தலைமையில்நடைபெற்றஇந்நிகழ்வில்,பிரதமஅதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கலந்துகொண்டதுடன், விசேட பேச்சாளராக ஜம்இய்யத்துல் உலமா சபையின் பத்வா குழு உறுப்பினர் யஹ்யா (பலாஹி) சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில், கல்லூரியின் உப தலைவர் கலீலுல் ரஹ்மான் உள்ளிட்ட பல உலமாக்களும் புத்திஜீவிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது, 15 மாணவர்களுக்கு 'அல்–ஆலிம்' பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் தன்சல் வழங்கல்

வெசாக்கை முன்னிட்டு கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தன்சல் நிகழ்வு இன்று (திங்கட்கிழஷ்) திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள மாகாண சமூக சேவைகள் திணைக்கத்துக்கு முன்னால் இடம்பெற்றது. மாகாணப் பணிப்பாளர் ஏ.ஜி.தெய்வேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த தன்சஸ் நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு தன்சல் உணவுகளை வழங்கி வைத்தனர்.